தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சச	திருவள்ளுவர் யாண்டு உ௰௧ சாதாரண, ஐப்பசி (1970 — அக்டோபர் — நவம்பர்)	மலர் எ

NOV ... TANJORE

தமிழ்க் கூத்தமைதி (கட்டுரை எண் ச)

பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன்,

குடந்தை. திரு. ப. சுந்தரேசன்

கூத்தரும், பாணரும், பொருநரும் விறலியும் என்ற சொற்களினுட்சியையும், ஆடன்மாந்தர் பாடற்பாணர், கருவிப்பொருநர், இவருட் பெண் பாலாராகிய விறலியர் என வழங்கும் பண்டைய தமிழிலக்கியச் சொற்களையும், பழந்தமிழ் பயின்றாரே நன்கறிவர். தொழின் முறையில் இவர்கள் ஆற்றுப்படுத்தற்குரியோராவர் என்பதும் பண்டைய மரபே. இக்காலம் தொழில் வல்லோர், பலரிடையேயும் அவ்வழக்கு வேறு வகையில் இருக்கிறது.

கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின் தலைவ! அதாவது கொல்லும் சிலைபோன்ற புருவத்தினையுடைய வஞ்சிக் கொம்பன்ன விறலியர்தம் நிருத்தத்திற்குத் தலைவனே! எனும் சொற்களைப் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடாண் படலத்துள்ளும் காணக் கிடக்கின்றன.

ஆடன்மாந்தர், கூத்தர்களில் ஆண்பாலார் என்பது வெளிப்படை. விறலியர், என்பது பெண்பாலார். கூத்துக்குச் சிறப்பு தருவதே ஆடல். விறல் என்ற பழந்தமிழ்ச் சொல்லைப் பிற்கால நாடகத்தமிழாசிரியர்கள், சத்துவம், எனவும் கூறி வந்தனர். 'சத்துவம் என்பாரும் உளர்' என்பார் அடியார்க்கு நல்லார். விறல் என்ற சொல்லும் சிறந்த நாடகத் தமிழ்ச் சொல்லாகும்.

விறலென்னும் சத்துவந்தான் பத்து வகைப்படும்.

க. மெய்ம்மயிர்ச் சிலிர்த்தல், உ. கண்ணீர் வார்தல், ௩. நடுக்க மடுத்தல். ச. வியர்த்தல். ரு. தேற்றம். ௬. களித்தல். எ. விழித்தல். அ. வெதும்பல். ௯. சாக்காடு. ய. குரற்சிதைவு

இவை பத்தும், நல்ல நாடகத் தமிழ்ப் பழஞ் சொற்களாக அமைந்து இருப்பதனை நன்குணர்தல் வேண்டும். விறல் என் பதனை குறிப்பு வரையறை எனக் காட்டி, 'சுத்தச் சுவை' ஆகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்மைத்தாய் வருவ தெனக் கொள்க, எனவும் என்னை? வேம்பென்று காட்டப்புக்கால் அவ்வேம்பின் இரதங் (சுவை) காட்டாதே அதுதான் தின்ற வனுக்கு மெய்யின்கண் வருவது. கருணையென்றால் பாவித்துக் காட்டுமதன்றி மெய்யாகக் கண்ணீர் வந்தழுவது. எனவும் அவைதாம், அச்சுவைகளில்

க. எண்ணம்வந்தால் தோற்றும் உடம்பில்.
உ. உடம்பின் மிகத் தோற்றும் முகத்து.
௩. முகத்தின் மிகத் தோற்றும் கண்ணில்.
ச. கண்ணின் மிகத் தோற்றும் கண்ணின் கடையகத் தென்றவாறு.

என மிக நுண்ணிதான கூத்தமைதிக்குரிய பண்பினை. அடியார்க்கு நல்லார் நன்கு விளங்கத் தருகிறார்.

இத்தகு விறல் பத்தும், பாட்டின் பொருளுக்கேற்ப கைகாட்டி, அதாவது கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி, (வல்லபம்) வலிமை, ஆற்றல், திறம் இவற்றைக் காட்டுதற்குப் பொதுவும், சிறப்புமாகவும், கதை தழுவி வருங் கூத்தான நாடகத்திற்கு மிகச் சிறப்பாகவும் அறிந்துணர்ந்து தொழில் வல்லோரால் நன்கு கடைப்பிடித்துக் கொள்ளப்பெற்றுக் காட் டப்பெறுவனவாகும். விறல் பத்தும் தெளிவுபெறப் பயிற்சிபெற்றுக் காட்டுதற்கு வல்ல பெண்பாலார் விறலி, விறலியர் எனப்பட்டனர். இவை பெரும்பாலும் விநோதக்கூத்திற்கே பயன்படுமாம்.

கூத்துத் தொழிலுக்கு அடிமனையான முதல் நிலை,

'அறுவகை நிலையும் ஐவகைப் பாதமும்
ஈரெண் வகைய அங்கக் கிரியையும்
வருத்தனை நான்கும் நிருத்தக்கை முப்பதும்
அத்தகு தொழில வாகுமென்ப'.

என எடுத்துக் காட்டப் பெற்றன. இவற்றுள்

க. நிலை
உ. கால் (பாதம்)
ங. உறுப்பு (அங்கம்)
ச. வளர்ச்சி (வர்த்தனை)
ரு. கை.

என்பன கூத்துத் தமிழ்ச் சொற்கள். இவையாவும் கூத்துத் தமிழின் இலக்கணத்தின் பாற்பட்டதாம். இப்பகுதி. அரங்கில் ஏறி, கூத்தாடுவாராய ஒருவர் (ஆண் அல்லது பெண்) அதற்கான உடையோடு வந்து ஆயத்தமாயுவந்து நிற்றலையும், இரு கால்களையும் தனது உடலோடு அசைத்துக் காட்டுதலையும் ஐவகையான முறை, பதினெட்டு வகை திருப்ப அசைவு, நால்வகை வளர்ச்சி. அதாவது தலையசைவு, கண்ணசைவு, கையசைவு முதலியவற்றுள் ஒரு கையை, அல்லது இருகையை, முப்பது வகையாகத் தொழிற் படுத்தி எழில்பெறக்காட்டல், என்பன போன்ற கூத்தமைதி பலவற்றிற்குரிய தொழின் முறைமைகளைக் காட்டுவதாகும். இதனை விரிப்பிற் பெருகும் என அடியார்க்கு நல்லார் கூறினர். இவற்றை எல்லாம் உள்ளடக்கிய கூத்துக்களோ பல. அவற்றையே பலவகைக் கூத்து என்றார் இளங்கோவடிகள். எல்லாவற்றிற்கும் பொதுவும், சிறப்பும், தனித்தனியே அறியப்பெறுதல் வேண்டும், எல்லாவற்றிற்கும் சுவை பலவும் மிகமிக இன்றியமையாததாகும்.

கூத்து வகைகள், பலவகை எனக் கூறப் பெற்றிருந்தாலும் அவற்றுள் முதன் முதலில் உணரப் பெறவேண்டிய சுவை என்பது ஒன்பது வகைப்படும். இஃதும் பொதுவே. இவற்றி லடங்காத சுவைகள் உளவெனில், அல்லாத சுவைகளும் வந்த சத்துவமும் (விறல்) இப்படி ஓட்டிக் கண்டு கொள்க, எனக் கூறினர் அடியார்க்கு நல்லார். சுவை ஒன்பதினையும்

க. வீரம்
உ. அச்சம்
ங. இழிப்பு
ச. வியப்பு (அற்புதம்)
ரு. இன்பம்
சு. சோர்வு (வீண்) (அவலம்)
எ. நகை
அ நடுவு நிலை
கூ. வெகுளல்

எனக் கூறுவதும் வழக்கேயாம். தனித்தமிழ் மரபுப்படியும் சுவை ஒன்பதினுள், வீரச் சுவையே முதற் சுவையாகக் கொள்ளப்பெறுதலை உற்றறிதல் வேண்டும் இவை இயல்பானிகழுமிடம் அறிந்து, கண்டு, உணர்ந்து, பயின்று நடிக்குமிடத்து நடித்துக்காட்டப் பெறுதல் வழக்கு அவ்வழக்கே நாடக வழக்கின் பாற்படுமாம். ஆயினும் உலகியல் வழக்கில் அவை அறிந்துணரப்பெறுதல் இன்றியமையாததாகும். கூத்துத் தமிழமைதிக்கு முற்கூறிய யாவற்றினையும் இடம் நோக்கியுணர்தலும், குறிப்பிட்ட இடத்திற்கே இன்னின்னவை என உணர்தலும் ஆடலாசிரியன், அல்லது நாடகத் தமிழ் ஆசான் இவர்களால் இலக்கணங்களை யறிந்து உணர்ந்து வகை செய்யப்பெற்று தொழில்வல்லார் தொழில் புரிவதற்கேற்ப வசியமாக்கிக் கொடுக்கத்தக்க நிலையில் இருத்தல் வேண்டும். அவ்வாறே நூல் செய்வது பழந்தமிழ் வழக்கு.

சுவை எல்லா மக்களுக்குமே பொதுவாம். யாழ்நூல் யாத்த விபுலாநந்த அடிகளார்; "இன்பம், துய்த்த உள்ளத்தினின்று மலர்ச்சியும் உயர்ச்சியும் தோற்றுவன. துன்பம், தோய்தலினலே மனத்தில் அசைவும் கலக்கமும் ஏற்படுவன. (சுவை) மலர்ச்சி உயர்ச்சி அசைவு கலக்கம் எனும் நான்கினும் நின்று உவகை பெருமிதம் இளிவரல் வெகுளி என்னும் நான்கினையும் தோற்றுவிப்பன. உவகையினின்று நகையும். பெருமிதத்தினின்று மருட்கையும் இளிவரவினின்று அச்சமும் தோன்றும், வெகுளியினின்று அவலம் தோன்றும். இவ் வெட்டும் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலினுள்ளே விரிவுற ஆராயப்பட்டன. இவற்றோடு சமநிலையினையும் சேர்க்க சுவை ஒன்பதாகும் என" எடுத்துக் காட்டினர்.

முற்கூறிய சிலப்பதிகாரப் பகுதியை இத்துடன் இணைத்துக்காண.

க.	பெருமிதத்தால்,	வீரம்		எனவும்
உ.	இளிவரலால்,	அச்சம்		,,
ங.	மருட்கையால்,	வியப்பு	(அற்புதம்)	,,
ச.	உவகையால்,	நகை		எனவும்
ரு.	கலக்கத்தால்,	வெகுளி		,,
சா.	வெகுளியால்,	அவலம்,		,,

இன்பம் இழிப்பு நடுவுநிலை என்பன பொது எனவும் உணரக்கூடும். இவையாவும் ஆங்காங்கு ஒப்புநோக்கி, ஒட்டிக் கண்டு உணரப் பெறுதல் வேண்டும், இது பற்றி இக் காலத்தே கிடைக்கப்

பெறும் தமிழ் நூல் பலவற்றையும் நன்கறிதல் வேண்டும். அம்முறை பற்றி நாம் புறப்பொருள்வெண்பாமாலை எனும் நூலி லிருந்து முதற்கண் விளக்கமாகக் குறித்து ஒவ்வொரு நூலையும் உணர்ந்து செல்வாம்.

தமிழ்க் கூத்திற்கு மிகப் பழங்காலத்தில் தோற்கருவிமட்டுமே பயன்படுத்தப் பெற்றன. அவற்றுள், துடி எனுங் கருவியே முதற் கருவியாகும். இச்சொல் ஈரெழுத்து ஒரு மொழிச்சொல், இத்தகு சொற்களுக்குத்தனித்த மதிப்பும் பழைமை நலமும்உண்டு.

தொல்குடி மரபிற் படுகண் இமிழ்துடி துடி கொட்ட ஆடப் பெறுங் கூத்தும் பலவகையாயினும், நூல் (பு, வெ, மா) பற்றிய முதற் கூத்து.

கூத்து-க. வள்ளிக் கூத்து

இதன் சுவை. இன்பம்

இக்கூத்து, முருக பூசை பண்ணுமவனோடு ஆடுங் கூத்தாம். வள்ளி நாயகியின் வேடங் கொண்டு ஆடுங் கூத்தாதலான் சிறப்பாகப் பெண்களே ஆடுங்கூத்து, வள்ளிக்கூத்தாம். ஆக இது பெண்பாற் கூத்து. இக் கூத்தின் வழக்கு முறை பலவும் முதற்றேற்றமும் குறிஞ்சித் திணைக்கே உரியது என்பது விளங்கும். இக்கூத்து, வேன்முருகற்காடும் வெறி எனவும் கூறப்பெறும். இத்தகு வள்ளிக் கூத்தினைக் காணின், அரனும் களிக்கும். அதாவது, இக்கூத்தினைக் கண்டானுயின் நிருத்தப்பிரியனாகிய நீலகண்டனும் மகிழ்வானும். சிவபெருமான் சிறந்த கூத்து ஆடுபவன். அவன் ஊழிக் கூத்து ஆடுபவன். அவனே மகிழ்வானும் வள்ளிக்கூத்தினைக் கண்டு. இக்கூத்து குறிஞ்சி நிலக்கூத்துள் ஒன்று. வேலினை யுடைய பிள்ளையார்க்கு (முருகக் கடவுளுக்கு) ஆடுங்கூத்தான இவ்வள்ளிக் கூத்தை, நகை விளங்க மெல்லிய முகையும் பூப்போன்ற அரிபரந்த கண்ணினையும் ஒளிமிக்க நுதலினையும் உடையவள், நல்ல நறு நாற்றத்தை உடம்பிலே நிறுத்தி மாலை, பக்கத்தே அசைய ஆடுவாளாம். அவள் குறிஞ்சி நிலப்பெண். இக்கூத்தே முதற்கூத்து எனக் கருதப்பெறுவதால் அகத்திணை களுள் ஒன்றாகிய குறிஞ்சியின் புறனான வெட்சித்திணையில், பகைப்புறத்து ஆனிரைகளைக் கவர்ந்து வந்து பகிர்ந்தளிக்கும் வீரர்களின் மனைவியராகிய மறத்தியரும் வள்ளிநாயகியின் வேடம்பூண்டு, முருக பூசை பண்ணும் வேலனும் தத்தம் கணவருடன் வெறியாட்டு

ஆடி மகிழ்வதுண்டாம். இக் கூத்தும் வீரர்கள் பலர் முன்னரே ஆடப்பெறுதலால் பொதுவியல் வகையையே சார்ந்ததாகும். வீரர்கள் வெற்றியோடு வந்ததைக் கண்டு மகிழ்ந்தாடுதலானும் இக்கூத்தின் வேறொரு பெயர் மகிழ்ந்தாடுங்கூத்து என்பதாம். இன்பத்தோடு கூடிய வீரச்சுவை வினையம் இக்கூத்திற்புலப்படும் இக்கூத்து, வெவ்வேறியல்பினவாகவும் பலவகைப்பட்டும் ஆடும் மரபு பற்றி விளங்குவதாகும். விரிவு ஆராயத்தக்கது.

கூத்து உ. இட்டாடு மாட்டு

ஆட்டு என்பது கூத்து. இக்கூத்து இட்ட அடியின்மேல் அடியிட்டு ஆடுங்கூத்து எனப்படும். இக் கூத்தினை ஐயனரிதனுர் கரந்தைப் படலத்துள் பிள்ளைத் தெளிவு எனும் துறையிற் கூறியிருப்பதாலறியலாம். இக் கூத்திற்கும் துடி என்றதோர் தோற் கருவியையே முழங்கப்படுமாம். பகைவர்களை வெட்டிக் கவந்த மாக்கிய மகிழ்ச்சியில் நின்றுடுங்கால் துடியின் கண்ணும் மகிழ்ந் தொலிக்கும். அதாவது கருவியின் வார்க்கட்டான இடமும் மகிழ்ந்து ஒலிக்குமாம். அவ்வாறு மகிழ்ந்து மகிழ்ந்து அக் கருவியினை முழக்குவார் என்பதே கருத்து. துடி கொட்டி ஆர்ப்பரவ மிகக்கட்டி வீரக்கழலினையுடையார் முன்னே நின்றுடுங் கூத்தாதலான் இக்கூத்தும் பொதுவியலைச் சார்ந்ததே. இக்கூத்து ஆண்பாற் கூத்து. இட்டவடி என்பது ஒரு காலைவைத்த இடத்தே அக்காலை எடுத்த பின்னர் மற்றொரு காலை அதே யிடத்து வைத்தல் என்பதாம். இக்கூத்து, முழுவதுமே வீரச்சுவை வினையம் கொண்டதாகும். வலது கால் ஓரிடத்தும் இடது கால் ஓரிடத்தும் மற்ற கூத்துக்களுக்கு வைத்தாடுவதுபோல் இக்கூத்து ஆடல் பெறுதல் கூடாது. போரில் ஏற்பட்ட தனது மார்பகத்துப் புண்ணைப் பிரியப்பட்டு விரும்பிக் கூத்தாடுவதால் அல்லது அப்புண்களைப் புகழ்ந்தாடுவதால் இக் கூத்து புகழ்க்கூத்து எனவும், விரும்பியாடுங் கூத்து எனவும் படும்.

வெட்சியில், மகிழ்ந்தாடுங் கூத்தும், கரந்தையில், விரும்பி ஆடுங் கூத்தும் என ஒரு வகையானும் இருவகைக் கூத்து புலப்படுதல் அறியலாம்.

இத்தொடர்பின் வழக்குமுறை, நம் தமிழகத்தில் பழஞ் செய்தி யாக ஒரு சில இடத்தே ஆராய்வாரின்றி இருப்பதனை தமிழக வரலாறு குறிப்பதற்கேனும் அறிஞர்கள் ஆராய்ந்து எழுத்தள விலேனும் எழுதி வைப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

ஈண்டு ஒரு சிறிய செய்தியினைக் குறிப்பாம். நம் தஞ்சைமா வட்டத்தில் திருவையாற்றிற்கு மேற்கே, கல்லணைச் சாலையில் கூத்தாடி வாய்க்கால் என்ற பெயரில் ஒரு கால்வாய் காவிரியிலிருந்து பிரிகிறது. அவ்வாய்க்காலின் மதகு, கூத்தாடி மதகு என்று இக் காலத்தும் நன்கே வழங்கி வருகிறது. செய்தி, பூந்துருத்தியார்-யாரோ பகைவரை, தலைவெட்டிக் கூத்தாடி மகிழ்ந்தாடிய இடமா தலான் அவ்விடத்து வாய்க்காலுக்கும், மதகுக்கும், அப்பெயர் வந்தது என்பதாம் ஆராய்ச்சியாளர் சென்று வழக்குமுறை ஆராய்தல் வேண்டும். கரணியம் நன்கு புலப்படும்

கூத்து ௩. பிள்ளையாட்டு

ஆட்டு என்பது ஆடுங்கூத்தாம், இக்கூத்து, நுடங்குவான் கூத்து எனப்படும் இக்கூத்திற்கும் துடியே முழங்கப்பெறும். இக் கூத்தும் போர்க்களத்தே பகைவரை வெட்டி அவரது குடரை மாலையாகத் தனது வேலில் சூட்டி, அந்த வேலை, வெற்றிக்குப் பின் திருப்பி விரும்பியாடுவதாம். இட்டாடும் ஆட்டு, பிள்ளை யாட்டு எனுமிரு கூத்தினை கதை தழுவிவருங் கூத்தாகிய நாட கத்தில் உரிய இடங்களில் பிற்காலத்தியக் கூத்தாடிகள் ஆடின ரென்பர். இஃதும் ஆண்பாற் கூத்தே விளையாடுங் கூத்துள் இக்கூத்தும் ஒன்ருகும். இவ்விரு கூத்தினையும் பழங்காலத்திய மன்னனும் பெரு வீரர்களோடு வீரராய் நின்று காண்பான். மன்னன் இங்கே வீரனைப் பொதுப்பட எல்லாரும் காணவே நிற்றலின் கூத்து பொது வியலையே சார்ந்ததாகிறது. வினையம், வீரச் சுவை வினையமேயாம்

வஞ்சிப் படலத்துள், குறுவஞ்சியைச் சார்ந்த துறையொன்று (53, இதுவுமது) அவிழ் மலர்க் கோதையர் ஆடல் ஒருபால் இமிழ் முழவம் யாழோடு இயம்ப, எனக் கூறுகிறது. அது மடுத்தெழுந்த மறவேந்தர்க்கு முன்னுடைப் பெறுவதால் வேத்தியல் வகையைச் சார்ந்ததாகும். அத்தகையக் கூத்துக்கள் யாழ்ப்பாட லோடும், முழவம் என்ற தோற்கருவியோடும் நிகழ்த்தப்பெறும்.

இலக்கியமும் பண்பாடும்

திரு. அ. இ. ராமசாமி, எம். ஏ; பி. எஸ்சி; பி. டி.
தமிழ்த்துறை,
மன்னர் சரபோசி அரசினர் கல்லூரி, தஞ்சாவூர்.

இலக்கியம்: வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இலக்கியம் மிளிர்கிறது என்பர் ஒரு சாரர். "சிறந்த கருத்துக் கருவூலங்களைக் கொண்டு இலங்குவது இலக்கியம்" என்று அறிஞர் எமர்சன் கூறுகின்றார். 'புது வாழ்க்கையினின்றும் தோன்றி வாழ்க்கைக்குரியதாகி வாழ்க்கைக்காகவே வாழ்கிறது' என்றும், 'அதுவும் ஒரு மொழியின் வாயிலாக வாழ்க்கை நெறிகளை எடுத்து இயம்புவது இலக்கியம்' என்றும் பேரறிஞர் அட்சன் இலக்கியத்திற்கு இலக்கணம் வகுக்குகின்றார். 'சிறந்த அறிவு ஒழுக்கங்களைப் புகட்டும் உயர்ந்த கருவியாக இலக்கியம் பயன்படுகிறது' என்று அறிஞர் வைகவுண்ட் மோர்லே கூறுகின்றார் 'இலக்கியம் மக்களுக்கு இயற்கையின் எழில் நலத்தை எடுத்துக்காட்டி அதைப் படைத்த இறைவனின் தன்மையினை நினைவூட்டி அவர்களை நல்லாற்றுப் படுத்தும் நெறியாகவும் உள்ளது' என்று தத்துவ மேதை தாமசு கார்லி கூறுகின்றார்

"உள்ளத்து உள்ளது கவிதை;
இன்பம் உருவெடுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில்
உண்மை தெரித்துரைப்பது கவிதை"

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கவிதைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

"புவியினுக்(கு) அணியாய், ஆன்ற
பொருள் தந்து, புலத்திற்றாகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்து, தண்ணென்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்"

என்று கம்பன் இலக்கியத்திற்கு வரையறை வகுத்துள்ளான்

மேற்கூறிய பேரறிஞர்கள், பைந்தமிழ்ப் பாவலர்கள் கூறிய கருத்தோவியங்கள் இலக்கியத்திற்கு இலக்கணம் கூற வழி வகுக்கின்றன-

வாழ்க்கைக்குரிய சிறந்த ஒழுக்க நெறிகளையும் உயர்ந்த கருத்துக்களையும் எடுத்துக் கூறி, இயற்கையையும் இறைவனையும் இணைத்து வாழ்க்கைக்குரிய நிலைத்த தத்துவ அறிவினையும் புகட்டி, கற்பனை வளத்தாலும், கருத்துச் செறிவாலும், உணர்ச்சிப் பெருக்காலும், உரிய இலக்கிய வடிவத்தாலும் ஒரு மொழியில் நிலைத்து நிற்பது இலக்கியம் என்று துணிந்து கூறலாம்.

பண்பாடு: 'பண்பாடு' என்பது மக்களின் உள்ளத்து இயல்பையும், 'நாகரிகம்' என்பது அவர்களின் புறத்தோற்றத்தின் இயல்பையும் விளக்குவனவாகும். வீரம், ஈகை, கலை, மானம், அறிவு, ஆற்றல், சான்றாண்மை போன்ற சிறந்த பண்பாடுகளைப் பண்பாடு என்ற சொல் குறிக்கும் - மனிதனின் உடை உணவு, அலங்காரம் என்பன நாகரிகத்தைப்பற்றிக் கூறுவனவாகும். 'பண்படு' என்ற சொல்லே 'பண்பாடு' எனத்திரிந்து மக்களின் செம்மையான உயர்ந்த பண்புகளைக் குறிப்பதாக வழங்குகின்றது. இப்பண்புகள் மக்களால் வழிவழியாக வளர்ந்து பண்படுத்தப்பட்டு வந்துள்ளமையால் இவற்றைப் பண்பாடு என்று வழங்குதல் சாலச் சிறந்ததாகும்.

தமிழ் இலக்கியம்: 'தமிழ்' என்றால் 'இனிமை' என்றே பொருள். எனவேதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"இனிமைத் தமிழ் மொழி எமது — எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது"

என்று இனிமையாகக் கூறுகின்றார். தமிழ் இலக்கியம் தித்திக்கும் தெள்ளமுதாகவும் தெள்ளமுதின் மேலான முத்திக் கனியாகவும், முத்தமிழாகவும், முரசு கொட்டுவதைக் காணுகின்றோம் தமிழ் இலக்கியத்தின் சுவை நற் கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதாக உள்ளது.

இன்பத் தேனாக இருக்கின்ற தமிழ் இலக்கியங்களை மூன்று வகைத் தேனாகப் பருகிக் களிக்கலாம். இயற்கை செறிந்த

மலையில் கிடைக்கும் குறிஞ்சித்தேன், முல்லை நிலத்தில் கிடைக்கும் காட்டுத்தேன். மருத நிலத்தில் கிடைக்கும் மருதத்தேன் ஆகிய மூவகைத் தேனாகத் தமிழ் இலக்கியங்கள் தித்திக்கின்றன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டுப் போன்ற சங்க இலக்கியங்கள் குறிஞ்சித் தேனாகவும், சிலம்பு, மேகலை, கம்ப ராமாயணம் போன்ற பேரிலக்கியங்கள் முல்லைத் தேனாகவும், பரணி, உலா, குறவஞ்சி, பள்ளு, பாரதி, பாரதிதாசன் பாடல்கள் போன்ற சிற்றிலக்கியங்கள் அனைத்தும் மருதத் தேனாகவும் மிளிர்கின்றன. இம்மூவகைத் தேனையும் முறையோடு அணுகி அவற்றை உண்ணும்போது உண்ண உண்ணத் தெவிட்டாமலும் உயிருக்கு உரம் ஊட்டுவதாகவும் இருக்கும்.

தமிழர் பண்பாடு :

இன்பத் தேனாகிய தமிழிலக்கியங்களைச் சுவைக்கும்போது தமிழ்ப் பெருமக்களின் உள்ளத்து இயல்புகளான உயர்ந்த பண்பாடுகளையும் புறத்தோற்றத்தின் இயல்புகளான நாகரிகத்தையும் நன்கு உண்டு களிக்க முடிகின்றது. பண்டைத் தமிழ் மன்னரிற் பலர் பொன் மலர் மணமும் பெற்றாற் போன்று, புவிச்செல்வத்தொடு கவிச் செல்வமும் பெற்றுப் பெருமை பெற்றார்கள். பாண்டியன் நெடுஞ்செழியன் கல்வியின் மேம்பாட்டை நன்கு உணர்ந்து கூறுகின்றான் ;

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

அரசர்கள் அடிப்படையாக வைத்து நீதியையும் நேர்மையையும் இருகண்களாகக் கொண்டு வாழ்வு நடாத்தி அவற்றினுக்காகத் தங்களையே தியாகம் செய்தார்கள் என்பதனைப் பாண்டியன் நெடுஞ்செழியன், கோப்பெருஞ் சோழன் போன்ற அரசர் பெருமக்கள் வரலாறு மூலம் அறிகின்றோம்.

நல்லிசைப் புலவர்களை அரசர்கள் பெரிதும் மதித்துப் போற்றியுள்ளார்கள் என்பதனை மாங்குடி மருதன், கபிலர், பிசிராந்தையார் போன்ற புலவர்கள் வாழ்க்கை மூலம் அறிகின்றோம். ஔவையார் பொன்முடியார், ஒக்கூர் மாசாத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பலர் சிறப்புற்று வாழ்ந்துள்ளனர்.

பண்டைச் சான்றோர் உயிரைக் காட்டிலும் ஒழுக்கத்தைப் பெரிதாக மதித்தார்கள் என்பதனை

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற குறள் மூலம் அறிய முடிகிறது. ஈகை உள்ளமும் கருணை வடிவமும் படைத்தவர்கள் தமிழ் மக்கள் என்பதற்குப் பறம்பு மலையை ஆண்ட பாரி முல்லைக்குத்தேர் கொடுத்ததும் பழனி மலையை ஆண்ட பேகன் மயிலுக்குத் தன் போர்வை ஈந்ததும் சான்றாக விளங்குகின்றன. இசைக் கலையில் பாணரும், நடனக் கலையில் விறலியரும் சிறப்புற்று விளங்கினர் என்பது தமிழர் கலைத்துறையில்பண்பாட்டின் சிகரமாகத் திகழ்ந்தனர் என்பதைத் தெள்ளத் தெளிவாக்கும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது பரந்த பண்பாட்டைப் படைத்தவர்கள் தமிழர்கள் என்பதனைப் பறை சாற்றுகின்றது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறுவதும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பகருவதும் தமிழரின் உயரிய பண்பாட்டின் மேம்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன. வீரமும், தீரமும், அருளும், ஆண்மையும் பண்பும், பாசமும், பாவும் பாவலரும், இசையும் இசைப்போரும், அரசும் நாடும், மக்களும் மன்னரும் உயிர்ப்புடன் உலவுகின்ற காட்சியைத் தமிழ் இலக்கியங்களில் கண்டு களிக்கலாம்.

இன்று நடப்பது :

சந்திர மண்டலத்து இயல்கண்டு தெளியும் அளவுக்கு அறிவியல் ஆற்றல் பெருகிவரும் இந்நாளில் மனிதன் எப்படி வாழ்கின்றான் என்பதனைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தற்போது மனிதன் மனிதனாக வாழும் வாழ்க்கை நெறியை மறந்து வாழ்கின்றான் வாழ்க்கை இலட்சியங்களையும் கொள்கைகளையும் மறந்து எப்படியும் வாழலாம் என்று எண்ணி வாழ்கின்றான். அன்பை அகற்றிப் பண்பை மறந்து அறிவையும் இழந்து அழிவுப் பாதையை நோக்கி ஆயிரம் ஆயிரம் அணுக் குண்டுகளை அடுக்கி வைத்திருக்கிறான். அறத்தை வெறுத்து மறத்தையே நம்பி மனித சமுதாயத்தை அழிக்க எண்ணுகின்றான்,

இலக்கியமே பண்படுத்தும்:

இந்நிலையில் மனிதனை மனிதனாக வாழ வழி செய்யக் கூடியது எது? அரசியலா? அரசியல் ஒரு சாய்க்கடை என்று அறிஞர் ஒருவர் கூறியுள்ளார். அத்தகைய அரசியலால் மனிதனை மனிதனாக மாற்ற முடியாது. சமயமா? சமயப் போர்வையில் நடந்த பல கொடுமைகளை நினைக்கின்றபொழுது சமயத்தாலும் முடியாது எனத் தோன்றுகிறது. எல்லா மக்களும் ஒருங்கே ஏற்கக்கூடிய திருக்குறள் போன்ற இலக்கியங்கள் தாம் மனிதனுக்குத் தேவையான சிறந்த உள்ளப் பண்புகளையும் உயர்ந்த நாகரிகத்தையும் கொடுத்து மனிதனை மனிதனாக வாழ வைக்கும் இன்பக் கருவூலமாக இருக்கின்றன.

அறத்தின் வழி நிற்றல்
ஆண்மையின் உயர்தல்
இன்பத்தில் திளைத்தல்
ஈதலில் சிறத்தல்
உள்ளத்தில் தெள்ளியராதல்
ஊக்கத்தில் தளராதிருத்தல்
எவரையும் தமராய்ப் பேணல்
ஏற்றத்தாழ் வின்றி வாழ்தல்
ஐயந்திரிபறப் பேசுதல்
ஒழுக்கத்தைக் காத்தல்
ஓரஞ்சாராது நிற்றல்
ஔவியந் தன்னை அகற்றல்

ஆகிய மனிதனின் செவ்விய பண்பாடுகள் அனைத்தும் இலக்கியங்களில் கலந்துள்ளன. உயிரும் உடம்பும் போல் இலக்கியமும் பண்பாடும் இரண்டறக் கலந்து இருக்கின்றன. ஆகவேதான், நல்லிசைப் புலவர்கள் என்றும் தாங்கள் நிலைத்து இருக்கும் பொருட்டு உலகத்திற்கு உயர்ந்த இலக்கியங்களை ஈந்து தம் புகழை நிறுவிச் சென்றுள்ளனர் போலும்!

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

புறம் 165

[கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 9–10—70 இல் நடைபெற்ற கலைமகள் விழாவின் போது நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்]

"நகைக் கூட்டஞ் செய்தான் களவன் மகன்"

திரு. K. சோமசுந்தரம், B. A., B. L, தஞ்சை.

ஞாலத்து மொழிகளனைத்தும் எழுத்திற்கும் சொல்லுக்கும் இலக்கணம் கண்டு இயம்ப, தமிழ்மொழியொன்றே அவ்விரு வகை இலக்கணங்களோடு வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துத் திகழும் தனிச் சிறப்பு வாய்ந்துள்ளது. சங்க நூற் புலமைச் சான்றோர்கள் வாழ்க்கைக்குரியது காதலும் வீரமுமெனக் கொண்டு, அவ்விருவுணர்ச்சிகளைக் கலைகளாக்கி, அழகுபடுத்தி அவற்றின் சுவைகளைக் கவர்ச்சிபட குழைத்துக் கலந்து பாடிய நறுந் தமிழ்ப் பாக்கள் போன்று வேறெந்த நாட்டுக் கவிஞர்களும் பாடவில்லையென்பது உலக இலக்கியங்களை நுனிந்தாய்வார்க்கு இவ்வுண்மை தெற்றெனப் புலனுகாமற்போகா. தானுகத் தன்னுள் அறிகின்ற நிலை அகமெனவும், பிறராகத் தன்னை அறிவதற்கு ஏதுவாய நிலை புறமெனவும், அகம் வளரின் புறம் பொலிவுறுமெனக் கொண்டனர் பழந்தமிழர். அமிழ்தினுமினிய தமிழ்மொழிக்கே யுரிய இப்பாகுபாடு ஏனைப் பிறமொழியாளர்களுக்கு ஒரு சிறிதும் புலப்படாமையான், உலக இலக்கியங்கள் அறியாததும் அறிய யியலாததுமான ஒரு மேம்பட்ட நிலையினைத் தமிழ் இலக்கியங்களெய்துள்ளமை தெளிந்து கொள்ளப்படும். காதலுணர்வு விரவிவரும் நூல்களை அகப்பொருளென்றும், வீரவுணர்வு விரவிய நூல்களைப் புறப்பொருளென்றும் கூறுப. பெரும்பான்மையாக, சங்கமரீ இயப்பாக்கள், இவ்விருவகை யுணர்ச்சிகளைக்கொண்டு, புலமைக் கலையோடுயாக்கப்பட்டிருத்தலால் அவைகள், இறவா உயிர்க்களை மேவி, இனிமையே விளையாநின்று பயன்படுதல் உற்றறியற்பாற்று.

உலகியற்கையும் உள்ளியற்கையும், புறமும் அகமுமாகக் கொண்டு, முறை சிறந்தனவாகிய முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றினில் முன்னைய இரண்டும் புறப் பொருள்களாதலும், உரிப் பொருள், அப்புறப் பொருளியற்கைகளைப் பயின்ருய்ந்து காணும் அகனுணர்விற்றெளிவே அகப்பொருளாதலும், அவைகளை நுகர்ந்து இயற்கையில் இழைந்து நிகழுமாறு தமிழ்ப் புலமைக் கல்வி ஒளியோர், உலகியல் வழக்கின்பாலதாகிய சொல்லோவியச் செய்யுளை யாத்தல் பாடலுட் பயின்று வரும்

சங்க மரபு. சங்க கால இலக்கியத்தில் புறத்தைப் பற்றியதைக் காட்டிலும் அகத்தைப் பற்றிய பாடல்கள் பன்மடங்கு காணப் படுகின்றதினுன், காதல் வாழ்வே தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாததாயிற்று, காதலின் அகவுணர்வு ஆழ்ந் தாழ்ந்து தெளிவு கண்டிலதேல், யாண்டும் பிறவியுமின்று; வாழ்க்கையுமின்று; நாகரிகமுமின்று. காதல் வாழ்வுபற்றி அறஞ் செய்தலும், பொருள் பெருக்குதலும் இன்பமுறுதலும் வீடடை தலும் புறப்பொருளாகுமென்க. இதனுன் அகத்திணை, வளனும் நலனும் பயந்து உலகியலாகி மிளிரா நிற்பது விளங்கும்.

காதல் என்ற சொல் அறிவும் உணர்ச்சியும் செறிந்து உள் ளத்தையும் உடலையும் இணைக்கும் நிலையினைக் குறிக்குமாதலான், காதலொழுக்கத்தைப் பட்டாங்கு பயின்ற தமிழ்ப் புலமைச் சான்ருேர், களவு, கற்பு என இருபாற்படுத்தி, களவில் கண் ணும் மனமும் தம்முள் இயைந்து அகநட்புக் கொண்ட தலை வனும் தலைவியும் மணந்து வாழும் வாழ்வே கற்பெனக் கொண் டார். களவொழுக்கத்தின் உயிர் நாடி கற்பென்க: கற்பின்றியும் களவும் அமையுமாறில்லை.

> 'பொற்பமை சிறப்பிற் கற்பெனப்படுவது
> மகிழ்வும் ஊடலும் ஊட உணர்த்தலும்
> பிரிவும் பிறவும் மருவியதாகும்'

என்பது கற்பின் இலக்கணம்.

காதலடைவது உயிரியற்கை யென்றும் தலைவன் தலைவியர் கூடும் கூட்டம் இறையும் உயிரும் கலந்து நிற்கும் நிலையெனவும், உயிர் இறைவனை நாடிக் கலக்க விழையும் ஆர்வமே காதலாகு மென்பதும், காதலின்பம் மக்கள் வளர்ச்சியொடு ஒட்டி வளர்வ தென்பதும் காதலினின்றும் வீரவுணர்வு முகிழ்க்குமென்பதும், தமிழ்ப் புலவர்கள் தம் மதிநுட்பத்தாற் மெய்ம்மையிற் கண்டு கொண்ட கருத்துக்கள். உலகியல் காதலின்பங்களைத் துய்த் துப் பின் தன்னுளே வெறுத்துத் துணிவுடன் பிறன்மனை நோக்கா ஆண்மையுடன் விளங்கும் மெய்ம்மையாளரின் செம்மை அறமே சீரிய வீரமென்க. காதலின்பத்து இழிவாய அவநிலையிலிருப் பாரை அவரறியாது கவர்ந்து கடிமணத்தால் கற்பெனும் தவ நிலையில் படிந்துத் திளைக்க உதவும் ஒழுக்கம் களவிய லொழுக்க மாகும், இஃதே பேரின்பப் பேற்றையும் அளிக்கவல்ல ஆற்றலை யுடையது பேரின்பப் பெருக்கில் அழுந்தும் ஒருயிர் அப்பேரின் பத்தை ஒருடலால் அனுபவிப்பதில் அமைதி கொள்ளாதும்,

நிறைமுறையாய விருப்ப முருதும், ஈருடலால் அனுபவிக்கும் உலப்பிலா இன்பம் கற்பியலாகும். களவியல். கற்பியலுக்குத் திறவு கோலாய் அமையப் பெற்றுயரும் ஒழுக்க நிலையாகும். இவ்வொழுக்க நிலை அன்பு முதிர்ந்து அருளாகப் பெருகும் பேரின்பக் காட்சியாய் மலர்வதை விளக்குவது அகத்திணையாகும்.

அறிவுத் திறனும் இவ்வரும் பேருண்மையினைத் தேர்ந்த பெரும் புலமையும் பொய்யா நாவு மெய்தி வாழ்க்கையின்கண் அருளொளியுமுடையார், சங்க இலக்கியத்தில், காதல் வாழ்வினை இசையின்பியல் ஒளி நாடக மெனக் கருதி காதலன்பு கடவுளன் பாக மாறும் இயல்பினைக் கூறினர். ஆனால் மேனாட்டாரோ, அன்பு நெறியும் உணர்வு நுட்பமுமின்றி, ஊற்றின்ப வாழ்வைக் காதலெனக் கண்டு அன்னவர்களது இலக்கியத்தில் அதனை ஓர் துயர் நாடகமாகவும், சோகம் தரும் நாடகமாகவுமாக்கி, காதலை அறிவை மருட்டும் கோளாறெனக் கொண்டனர். அதனால், வாழ்க்கைக்குத் தொடர்பின்றி நிகழும் காதல் நிகழ்ச்சிகளை அன்னவர்களின் நூல்களில் பரக்கக் காணலாகுமென்பது இங்கு நினைவு கூரற்பாலது

தமிழ் அகப்பொரு ணூல்களில் தலைச்சிறந்தது கலித்தொகை யாகும். தமிழ் மொழிக்கு சிறப்புத் தந்துள்ள இவ் விலக்கியம், அக வாழ்வின் சுவையாய நுணுக்கங்களையும் சுவைபட எழிலு டைய நாடகப் பண்புடன் எடுத்திசைப்பதில் சிறப்புடையது; அகத்துணர்வால் அனுபவிக்கத்தக்கதை உணர்ந்து களித்தற் குரிய கலினுடையது: பயிலுங்காலை உடற்கின்பமும், உணருங் காலை உயிர்க்கின்பமும் அளிக்க வல்லது, வாழ்வைச் செம்மைப் படுத்தும் சுவை நலனையும் பயனையும் அறிமுகப்படுத்தும் செவ் வியினையுடையது: அகவாழ்வில் ஊன்றி ஊறிய அனுபவ விளைவாலெழுந்த இலக்கிய இனிமையும் சொற்சுவை யூற்றினை யும் தன்னகத்தே கொண்டுள்ளது. நாடக வழக்கினும், உலகி யல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கத்திற்குச் சிறந்த தாக ஆசிரியர் தொல்காப்பியனாரால் போற்றிக் கூறப்படும் புலவர் பழகும் நடையழகுடையது. ஒலி ஒழுங்கும் எளிய ஒலி நயமும் உணர்வுச் செல்வமு மொருங்கே பெற்று, சீர்தளைச் சிறப்பால் பயில்வார் உள்ளத்தைத் தெளிவாகப் பண்படுத்தி, உணர்வெனும் ஊற்றுப் பெருக்கின்வழி, உண்மைகளைச் சுவை முதிரப் புலப்படுத்தும் பெற்றிமையுமுடையது. கலித்தொகை யாகிய பேராழியின் அகத்துணைச் சுவையின் மாட்சியினை அளந் தெடுத்து அறுதியிட்டுக் கூறுவது இயலாததொன்று. சில்நாள்

வாழும் சிற்றறிவுடையார் சிறு நாழி கொண்டு எத்துணையளவு முகத்தற்கூடும்! பானைய விழுக்கு ஒரு பதமென்ன ஈண்டு அரும் பொருளொடு சொல் வளம் பழனிய கலியில் வந்துள்ள ‘நகைக் கூட்டஞ் செய்தான் களவன்’ மகனைப் பற்றி ஒன்று காட்டி, அக் கலிப்பாவின் இயற்கை மாட்சியும் ஆட்சியும் காண்குவம்.

‘சுடர்த் தொடீஇ கேளாய் தெருவினு மாடு
மணற்சிற்றில்[1] காலிற் சிதையா[2] வடைச்சிய[3]
கோதை[4] பரிந்து[5] வரிப்பந்து கொண்டோடி
நோதக்க[6] செய்யுஞ் சிறுபட்டி[7] மேலோர்நா[8]
ளன்னையும்யானு மிருந்தேமா[9] வில்லிரே[10]
யுண்ணுநீர் வேட்டே[11] னென வந்தாற் கன்னை
யடர் பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணு நீரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை[12] யறியாது சென்றேன் மற்றென்னை
வளைமுன் கைபற்றி நலியத்[13] தெருமந்திட்[14]
டன்னாயிவ னொருவன் செய்தது காணென்றேனா
வுன்னை யலறிப் படர்தரத்[15] தன்னையா
னுண்ணு நீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து[16] நீவ[17] மற்றென்னைக்
கடைக்கணாற் கொல்வான் போனோக்கி நகைக் கூட்டஞ்
செய்தானக் களவன் மகன்’

(குறிஞ்சிக்கலி 15)

இச் செய்யுட் கருத்தினைப்படி யெடுத்துக் கூறுதும். ஒளியுடைய வளையலணிந்த என் உயிரினும் இனிய தோழி! யான் இது

---

1. சிறு வீடு, 2. அழித்து, 3. சூடிய, 4. மாலை 5. பிடுங்கி, 6. நோவத்தக்க, 7. சுட்டிப் பையன் 8. முன்னொரு நாள், 9 இருந்த அளவில் 10. வீட்டிலுள்ளவர்களே! 11. விரும்பினேன், 12. பட்டியை, 13. தொந்தரவு கொடுக்க, 14 வருத்தி அலமரல், 15. ஓடி வருதலைச் செய்ய, 16. முதுகை அழுத்தி, 17. தடவ.

காறும் நினக்கு மறைத்து வைத்துள்ள நிகழ்ச்சியினைப்பற்றிக் கூறுவதைக் கேள்! யாம் பண்டு மணல் நிறைந்த தெருவில் சிற்றில் புனைந்தும் சோறட்டும் விளையாடுங்கால், காலால் அவற்றைச் சிதைத்தும், எம் கூந்தலிற் புனைந்த மாலையினைப் பிடித்து இழுத்தும், அறுத்தும், யாம் விளையாடிய பந்தையும் பற்றிக்கொண்டு ஓடி நோவத்தக்க குறும்புகளைச் செய்யும் அந்தச் சிறியனாகிய பட்டியை அறிவாயன்றே!

அண்மையில் ஓர் நாள் விருந்தையும் விலக்கலாகாப்பகல் வேளையில், என் அன்னையும் யானும் இல்லிருக்கும் அமையத்தில் 'யார் வீட்டிலிருக்கிறது' என ஓர் மெல்லிய குரல் கேட்டது. எதிரில் நோக்க, 'தாங்கற்கரிய தாகம்! தணிமின் நீர் வேட்கை' என்றான் ஒரு தனி மகன். அவன், யான் முன்னர் அறிந்திருந்த, அந்தப் பட்டிதான்.

என் அன்னை அவன்பால் மனமுருகி இரங்கி, என்னை 'குடி தண்ணீரெடுத்துக் குவளையில் வார்த்துக்கொடு' எனக்கூற யானும் அது சமயம் அவனைப்பற்றி யாதொன்றும் அறியாதவள் போலச் சென்று, தண்ணீரை நீட்டிய ஞான்று, என் முன்கையை மன உறுதியோடு நன்கு இறுகப் பிடித்து பெரிதும் நலிந்தான். அதிர்ச்சியால் மனஞ் சுழல, செய்வதொன்று அறியாது, யான் அஞ்சி, 'அன்னாய்! இவன் செய்வதை இவண்பார்' என அலறிட, அக்கணமே அலறலோடு அன்னையும் ஓடிவர, யானும் நாணம் மேலிட இரக்கத்துடன் 'இவன் நீருண்ணுங்கால், விக்கி வருந்தினான்' என்றேன் துன்பமும் இன்பமும் முகத்தில் ஒருங்கு தோன்ற என் அன்னை அவனது முதுகைப் பல முறை தடவிக் கொண்டே நிற்க, கொல்பவன் போல் கடைக் கண்ணால் என்னை அக் களவன் மகன் ஒரு நோக்கு நோக்கி நகைக் கூட்டஞ் செய்தான், இது காண் நிகழ்ந்தது.

இக்கலிப்பாவில் தமிழர் தம் அகவாழ்வின் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன. அவை உணர்ச்சி வேகம் மிகக் கொண்ட மனத்தத்துவச் சூத்திரங்களாக அமைந்துள்ளமை காணப்படும். இக்கலிப்பாவின்கண் மன அமைதி தரும் இயலுண்டு- ஒலி அமைதி தரும் இசையுமுண்டு: மெய்யின் இயக்க விளக்கத்தைச் சுட்டும் நாடகமு முண்டு, நாடகத்திற்குரிய அங்கம், காட்சி உறுப்பினர் உரையாடல் ஆகிய அனைத்தும் பெற்ற இப்பா, ஓரங்க நாடகமாகும், அகமும் புறமுமான இயற்கை முறையிலே யாக்கப்பட்டிருக்கும் இக் கலிப்பாவில், உணர்ச்சி பெருகக் கிளந்தோதப்பட்டிருக்குங் கருத்தழகின் சிறப்பியல்பு உள்ளத்தைக்

கொள்ளை கொள்ளும் பான்மையது. இது உள்ளத்தின் உயர்விற்கு ஊக்கமும் ஆக்கமுமளித்து உணர்வோடு ஒளியுமூட்டி வளங்கொழிக்கும் நல் வாழ்விற்கு வழிகாட்டும் ஒளி விளக்கு இதன்கண் பண்டைய மக்களின் ஒழுக்கப்பேறும், மகளிர் மாண்பும், அரும்பெரும் பழக்க வழக்க உண்மைகளும் நன்கு தெரிந்து கோடற்கு ஏற்ற கருவியாய் அமைந்துள்ளமை தேறப்படும்.

காதல் முத்தமிடும் இம் முத்தமிழ்க் கவிதையில், காதலின் நுட்பத்தையும் எழிலையும், ஒளியையும் எடுத்துக் காட்டும் கருத்தாழமும் காதலோவியமும் கலந்து மின்னுகின்றன : காதலும் வீரமும் மலர்கின்றன : கண்ணுக்குப் புலப்படாததும், செவிக்கு எட்டாததுமாகிய இன்பங்கள், உவகை பிறக்கும் வகையாய் சிறந்து விளங்குகின்றன : இணைபிரியாது காதலித்து இன்புறும் உயர்ந்த மனநிலைகளின் மென்மையாய அந்தரங்க அமைப்பினையும், அழகுக்கு அழகு தந்து உவகைச் சுவையினையூட்டும் நாணின் சிறப்பியல்பினையும் அலசிக்காட்டப்படுகிறது. காதலிலே நம்பிக்கை வளரும் அழகும், பெண்மையில் மறைந்து கிடக்கும் உண்மைகளும், பெண்மையின் வாழ்வு பெண்மையோடு கூடிய காதலுணர்வின் அடிப்படையின் மேல் சுழலும் வகைகளும் புலனாகின்றன : காதல் வாழ்வுக்குரிய மெய்ப்பாட்டின் இலக்கணம், சுருக்கமாகவும் தெளிவாகவும் உணர்த்தப்படுகின்றது. காதலொழுக்க மெனும் விழுப்பமிக்க அறம் உயிரினும் ஓம்பப்படுமென்பதும் அவ்விழுப்பொருளின் உயிருக்குயிராகயுள்ளது அன்பெனும் பண்பென்பதை அழகுற இசைக்கப்பட்டுள்ளது : களவில் கண்ட காதல் கற்பெனும் பண்பிற்கு அழகூட்டும் வகை இயம்பப்பட்டு பெண்மைக் கற்பின் நெறிவழியது தமிழ்ப் பண்பென்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது ; காதல் சுதந்திரத்தில், அறிவுக் காதல் உரனும் இனிமையுங்கொண்டு, அறத்தொடு நிற்றலாகிய செல்வக் கருத்தினை எழிலுற அமைத்து விளக்கப்பட்டுள்ளது.

இக்குறிஞ்சிக் கலிப்பாவினை கல்வி விளக்கமுடைய கபிலரென்னும் புலவர் பெருமான் தன் நுண் மாண் நுழை புலச் செவ்வியால் காதற் பண்பு விளங்கும் வண்ணம் ஆக்கித்தந்தார். இவர் பொருந்தில் இளங்கீரனாரால்

தாழாது

செறுத்த செய்யுட் செய் செந்நாவின்
வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்

என பாராட்டப்பட்டவர். கபிலர் ஒரு ஞானி: விஞ்ஞானி: இரசவாதி, வாழ்வியல் உண்மைகளை உணர்வு நிலையினைத் தொடும்படிச் செய்து அறிவிற்கு விருந்தாக அமைத்து மக்களின் எண்ணங்களை உயர் நிலைக்குச் செலுத்தக்கூடிய ஆற்றலுடையவர். இக் கவிதையில் காதலால் கட்டுண்டவரது உள்ளக் கிடக்கையை உணர்ச்சிதரும் சொற்களாலே உருவாக்கி, மிகு நயத்தோடு காதலின்பத்தை உணரவைத்து, ஆடவனது ஆற்றலையும், பெண்மையின் பண்பியல்பையும் பெண்ணுர்வின் ஆழத்தையும் நெறியொடு புலப்படுத்திக் காதல் வளரும் கதையின் சுருக்கத்தைக் கனிவான சொற் பின்னல் வழி, சிறந்துயர்ந்த கலைப் பண்பு கொண்ட நடையில் நாநலம் வாய்ந்த நல்லியற் கவிஞர் எடுத்துக் காட்டும் முறை இறும்பூது பயக்குவதாகின்றது. காதலொழுக்கம் களவொழுக்கமாக நிகழும் நெறியில், காதலின்பம் அன்பென்னும் தன்மையினின்று பிறந்து பெருகும் பான்மையோடு, உடல் மனம், அறிவு எனும் மூன்றினில் நிலைத்து நிற்பதைக் கிழியில் தீட்டப்பட்ட எழிலோவியமாக விளங்க வைத்தார்.

காதல் சுரக்கும் ஊற்றாக, சொல்லும், கருத்தும், கூறும் முறையும் எழில் கொண்டு விளங்குவதினுன், காதல் நிறைந்த இக்கவிதையில் அமைதி நிலவுவதும், அழகு மிளிர்வதும் கண்கூடு, காதலில் கவிதை ஊறி வளர்ந்து பின்னிப் பொலிவதால், காதல் சித்திரம் மொழியலைகளில் சுழன்று சிதருது, உறுதியாக அமைந்துள்ள மென்மை, உணர்வுக்குத் தெரியாத உருவம் தரும், குறிஞ்சிக்கபிலரது மொழிப் புலமையினைக் சுட்டிக்காட்டா நிற்கும், தனித்திருந்து இளமையில் பட்டியோடு விளையாடியதை நினைந்து மகிழும் தலைவியின் இயல்பைக் காட்டி, அப்பட்டி, காதலின்பத்தை எப்படி எட்டிப் பிடித்தானென்பதை நம் கண்முன் நிகழும் காட்சிப் பொருளாகத் திகழவைத்து, நல்ல கதைப் பண்போடு கூடிய ஒரு நிகழ்ச்சி விளக்கத்தை இக்கவிதையில் மலர வைத்துள்ளார். தகுதியாய சொல்லருமையோடு தனது கருத்தைப் படிப்பவர் மனத்திலும் கேட்பவர் மனத்திலும் பதிய வைத்து தம் மனத்தின் கண் தோன்றிய உணர்வு அலைகளை, அவர்கள் மனதிலும் எழுப்பி, கூற்றாலும் கிளக்கக் கூடாததைக் குறிப்பால் வியப்பும் திகைப்பும் ஏற்படத் திகழ வைக்கிறார், மற்றும் வாழ்க்கையைப் பற்றிய அறத்து நன்மையோடு கூடிய உண்மையினை அறிவின் தெளிவிலும் காதலழகு உணர்வின் உயர்விலும், செறிவும் திட்பமும் பட தெளிய வைத்து, அகப் பொருள் இலக்கணத்தையும் இக் கலிப்பாவில் வளம் படுத்தினர்.

(தொடரும்)

இலக்கியச் சிந்தனைகள்.

திரு. அ. தட்சிணாமூர்த்தி, பி. ஏ. (ஆனர்சு) பி. ஈடி.
புட்பம் கல்லூரி, பூண்டி.

I. புற நானூறு :

பண்டைத் தமிழரின் வரலாற்று நூலாகத் திகழும் புற நானூறு பற்றி எண்ணற்ற ஆராய்ச்சி நூல்களும், கட்டுரைகளும் அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் அந்நூல் பற்றிய ஆராய்ச்சி முழுமை பெற்று விட்டதாகக் கொள்ள முடியாது. சங்க நூல்களைப் பற்றிய ஆராய்ச்சியைச் செம்மையாக நடத்தி இலக்கிய ஆராய்ச்சிக்கு வழிகாட்டிய பேராசிரியர் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் அவை தொகுக்கப்பெற்ற கால வரையறைகள் பற்றி ஓரளவு தெளிவுபடுத்தியுள்ளார்கள். அவர்கள் குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகியவைதொகுக்கப் பெற்றபின்னர் புறநானூறு உருவாகியிருக்கவேண்டுமென்றார்கள் இக்கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதே. அது மட்டுமின்றி இந் நூல் இருவேறு காலங்களில் தொகுக்கப்பெற்று இருவேறு தொகுதிகளாகவே ஒரு காலத்தில் மக்களிடையே உலவியிருக்க வேண்டும் எனக் கருதுதற்கு இடமுண்டு. இதுபற்றியும் இதைப் போன்ற வேறு சிலசெய்திகள் பற்றியும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றுள்ள நிலையில் புறநானூற்றை நோக்குவார் அதில் மூன்று பகுதிகளைக் காணலாம். 1 முதல் 266 பாடல் வரையில் முதல் பகுதியாகவும், 267 முதல் 358 முடிய இரண்டாவது பகுதியாகவும், 359 முதல் 400 முடிய மூன்றாவது பகுதியாகவும் கொள்ளலாம். இவற்றுள் முதல் 266 பாடல்களில் இறுதியிலுள்ள சில பாடல்களைத் தவிர ஏனையவை யாவும் வேந்தரையும் வேளிரையும் தலைவர்களாகப் பெற்றவையாகும். மன்னர்கள் மூவர் பாடிய வஞ்சினக் காஞ்சிப் பாக்களும், பொருண் மொழிக் காஞ்சிப் பாக்கள் சிலவும், செவியறிவுறூஉ ஆனந்தப் பையுள், தாபத நிலை, தாபத வாகை முதலிய துறைகள் பற்றிய பாக்கள் சிலவும் இப்பகுதியில் இடம் பெறும். கையறு நிலையிலமைந்த பாக்கள் யாவும தொகுதியாக இடம் பெறுகின்றன. கூடியவரையில் ஒரே தலைவனைப் பற்றிய பாக்கள் வரிசையாக இடம் பெறுகின்றன. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், வேள்பாரி, அதியமான் முதலியவர் பற்றிய பாக்கள் இவ்வாறு ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் 246-ஆம் பாடல் ஒன்றைத்

தவிர ஏனையவை சிதைவின்றிக்காணப்படுகின்றன. இப்பகுதியில் இறுதியிலமைந்த சில பாடல்கள் எத்தலைவரையும் பற்றியின்றிப் பொதுவாகப் பாடப்பட்டனவே யெனினும் தொகுத்தோர் அவைகட்கும் தலைவர்கள் உண்டு எனக் கருதி மயங்கியதாகத் தெரிகிறது. இதனைத் தலைவன் பெயர் எழுதவேண்டிய இடத்தில் புள்ளியிட்டுக் காட்டுவதைக்கொண்டு உணரலாம். அவற்றுள் சிலவற்றுக்குத் தலைவர் பெயர் சிதைவுற்றன வெனக் கருத இட முண்டெனினும் பல பொதுவான துறைப்பாக்களே. இத்தகையனவற்றை இப்பகுதியில் இறுதியாக வைத்திருப்பதால் இதனைத் தொகுத்தகாலத்தில் கிடைத்த இப்பாடல்களைக் கூடிய வரையில் முறைப்படுத்தி ஒரு முழுவடிவம் கொடுக்க முயன்றுள்ளனர் என்பது உய்த்துணரப்படும்.

267, 268 இரண்டுபாக்களும் கிடைத்த எப்பிரதியிலும்காணப் படவில்லை இஃதெவ்வாறு நிகழ்ந்தது ? ஒரு சுவடியில் முதலிலும் இறுதியிலும் உள்ள ஏடுகள் சில சிதைவதற்கு மிகுதியான வாய்ப் புக்கள் உண்டு. எனவே இது நாம் குறிப்பிட்ட முதல் தொகுதியின் இறுதிப் பாடல்களாகவோ, இரண்டாம் தொகுதியின் முதற்கண்ணமைந்தனவாகவோ இருக்கவேண்டும். கிடைத்துள்ள குறைச்சுவடிகளில் ஒன்று 267 முதல் பாடல்கள் கொண்டதாகவுள்ளது. அதுபோன்றே ஒரு சுவடி 1 முதல் 266 முடிய பாக்களைப்பெற்றுள்ளது. எனவே இவ்விரு பாக்களும் இரண்டாம் தொகுதியின் முதலில் இருந்தே சிதைந்தனவெனலாம். மாறாக, இவ்விரண்டும் ஒரே தொகுதியின் இடையில் இருந்தன வெனின் முழுதும் இவ்வாறு சிதைவுற வாய்ப்பில்லை யென்க.

267 முதல் 358 இறுதியாக அமைந்த பாக்கள் அனைத்தும் எத்தலைவனையும் பற்றிப் பாடியனவல்ல. பல்வேறு புறத்துறைகள் பற்றிப் பொதுவாக பாடப்பட்டவையாகும். இப் பகுதியில் வல்லாண்முல்லை, பெருண்முல்லை, மகட்பாற்காஞ்சி, மூதின் முல்லை முதலிய துறைப்பாக்கள் வரிசையாக இடம் பெறும். இப் பகுதியிலமைந்த 90 பாக்களில் 315,ஆம் பாடல் மட்டும் அதியமானைத் தலைவனாகப் பெற்றுள்ளது. இப்பாடல் வல்லாண் முல்லைத்துறையைச் சார்ந்ததெனவே 313 முதழ் 325 வரையில் இடம்பெறும் இத்துறைப்பாக்களோடு ஒருங்குவைக்கப்பட்டது.

இனி 359 முதல் 400 முடிய வமைந்த பாடல்களனைத்தும் முதற்பகுதியிலுள்ள பாடல்களைப் போன்றே வேந்தர் பற்றியும் வேளிர்பற்றியும் பாடப்பட்டவையாகும், 1 முதல் 266 முடிய

வுள்ள பாக்களினடியில் எழுதப்பட்டுள்ள பாடியோர் பாடப் பட்டோர் பற்றிய குறிப்பும் 358 முதல் 400 முடியவமைந்த பாடல்கட்கமைந்த இத்தகைய குறிப்பும் அமைப்பில் வேறுபடு கின்றன. முதல் பகுதியில் "தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனர் பாடியது" என்பது போல் விளக்கமாக வரையப்பெறவும், மூன்றும் பகுதியில் "நாஞ்சில் வள்ளுவனை ஔவையார்" என்பதுபோல் வினை முடிபு இன்றி வரை யப்பெற்றுள்ளது. இருபகுதிகளையும் தொகுத்துக் குறிப்பெழுதி யோர் ஒருவரே யென்னில் இவ்வேறுபாடு தோன்ற இடமில்லை யன்றோ!

அவ்வாறெனின் இடையிலமைந்த 92 பாக்களையும் தொகுத் தவர் முன்னவரா பின்னவரா அன்றி இருவரினும் வேறுபட்ட வேறொருவரா என்ற ஐயம் நிகழ்வது இயல்பே. இதற்கு இப் பகுதியிலுள்ள 315 ஆம் பாடல் உதவுகிறது. அதனடியில் "அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார்" என்று குறிப்புக் காணப்படுகிறது. எனவே இது இரண்டாம் தொகுதியைத் தொகுத்தவர் பணியே என்பது தெளிவாகிறது.

இந்நூலுக்குப் பழையவுரையொன்று கிடைத்துள்ளது அவ்வுரை முதல் 266 பாடல்களுக்கே யுள்ளது. எனவே இவ் வுரையாசிரியர் கைக்கு எட்டியது இம்முதல் தொகுதியே யென் பதும் அதுவே செல்வாக்குடன் விளங்கியுள்ளதென்பதும் கண் கூடு. அவருக்கு இரண்டாவது தொகுதியும் கிடைத்திருக்கு மெனின் அதற்கும் உரையெழுதி இருக்கக்கூடும்.

தமிழ் நாட்டில் வழங்கிய ஓலைச்சுவடிகள் அனைத்தும் ஒரே மூலச் சுவடியைப் பார்த்துப் படியெடுக்கப் பெற்றவையாகும். எனவேதான் ஒருசுவடியில் உள்ள சிதைவு எல்லாச்சுவடிகளிலும் காணப்படுகிறது. இரண்டாம் பகுதியிலமைந்த பாடல்களில் பல அரையுயிராய் நிற்கின்றன. இச்சிதைவுகள் தொகுக்கும் பொழுதே இருந்தனவெனக் கூறமுடியவில்லை. தொகுக்கப் பெற்று முழுமையடைந்தபிறகு போற்றுவாரின்மையால் இப்பகுதி இவ்வாறு சிதைந்திருக்கவேண்டும். அவ்வாறு கொள்ளாமல் முன்பே சிதைந்திருந்தனவெனக் கோடினும் தவறுகாது. முதல் தொகுதி உருவாகிப் பலகாலத்திற்குப்பின் இரண்டாம் தொகுதி தொகுக்கப் பெற்றிருப்பின் இவ்விடைக் காலத்தில் இச்சிதைவுகள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. எனினும் முதற்கருத்தே வலிமை யுடையது. பாடிய புலவர், தலைவர்பற்றிய குறிப்புக்களில் சில

அரைகுறையாக இருப்பதால் அவை பின்னர்ச்சிதைந்தன வாகவே தோன்றுகின்றன எனவே இவ்விரண்டாம் பகுதி மக்களிடம் அவ்வளவாகச் செல்வாக்குடன் வழங்கப்பெறவில்லை எனலாம், கிடைத்துள்ள சுறைச்சுவடிகளில் முதல் பகுதி பற்றி யனவே மிகுதியாகவுள்ளன' இரண்டாவது பகுதியில் அவ்வாறு பலபிரதிகள் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்துச் சுவடிகள் இரண்டு கிடைத்துள்ளன. அவை முறையே 267—369, 1—369 பாடல்களைக்கொண்டுள்ளன. எனவே 1 முதல் 266 வரையில் அமைந்த சுவடியைப் பெற்றிருந்த ஒருவர் இரண்டாவது தொகுதியையும் படியெடுத்துச் சேர்த்துக் கொண்டுள்ளார் என்பது விளங்குகிறது. 370 முதலுள்ளவற்றை படியெடுக்க அவர் தவறினர் போலும்

கிடைத்த சுவடிகள் பதினெட்டில் 5 சுவடிகளே முழுமையாக அமைந்தவை. ஏனைய 13 சுவடிகளில் 5 சுவடிகள் 1-260. 1-261 1—260, 1-216, 1 - 266, எனப் பாக்களைக் கொண்டுள்ளன, மேலெல்லை 266 தான் என்பது நம் கருத்தை அரண்செய்து நிற்கின்றது. எனவே மேற்கண்ட கருத்துக்களைக்கொண்டு பார்க்கும் பொழுது இந்நூல் இருவேறு காலங்களில் தொகுக்கப்பெற்று முழுமையடைந்துள்ளதெனத் தெரிகிறது,

1 முதல் 266 எருகவுள்ள பகுதியில் ஒரே தலைவன் பற்றிய பாக்களை வரிசையாக வைத்துள்ளனர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பற்றிய 11 பாக்கள் இப்பகுதியில் இடம்பெறும். அவ்வாறிருக்க இரண்டாம் பகுதியில் அவன்பற்றிய வேறு 3 பாக்கள் இடம்பெறுகின்றன. எனவே முதலிலே இவை கிடைக்க வில்லையென்றும் பின்னுல் வந்தவர்கட்குக் கிடைத்தனவென்றும் கொள்ளவேண்டியுள்ளது. இதுவும் நம் கொள்கைக்குத் துணை யாகிறது.

இந்நூலுக்குப் புறநானூறு, புறம்பு நானூறு என்ற பெயர் களோடு 'புறப்பாட்டு" என்ற பெயரும் வழங்கி வந்துள்ளது. எனவே 400 பாக்கள் கொண்ட நூலாக இது உருவாவதற்கு முன்னர் இதற்கு இப்பெயரே வழங்கிற்றெனலாம், அகப்பாடல் களெல்லாம் தொகுக்கப்பெற்றபோது புறப்பாக்களும் தொகுக்கப் பெற்றிருக்கலாம், எனினும் அந்நூல்கள் 400 பாக்கள்கொண்ட நூல்களாக உருவாக்கப் பெற்றதுபோல் இதனையும் உருவாக்கு தற்குப் பாக்கள் கிடைக்கவில்லைபோலும். எனவேதான் பின்னுல்

வந்தவர்கள் அரிதின்முயன்று எவ்வாறேனும் 400 பாக்களைத் திரட்டிவிடுதல் வேண்டுமென்று முயன்று ஒருவாறு முடித்தனர் போலும்.

இனி, புறநானூறு தொகுக்கப்பெற்ற காலம் எதுவென்பது பற்றியும், முதலில் தொகுத்தவர் யாராக விருக்கலாம் என்பது பற்றியும் ஒருசிறிது நோக்குவோம், கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த அப்பரடிகளும் திருஞான சம்பந்தரும் அகத்துறைப் பாக்கள் பலவற்றைத் தெய்வத் தன்மையோடு பாடியுள்ளனர். பழைய அகப்பாடல் மரபு குறிப்பிடத்தக்க மாறுதலுற்று தெய்வக் காதல் பாட்டுகளாக மலர்வதை இங்கே காணலாம் தலைவி கூற்றுகவும், செவிலிக்கூற்றுகவும் பல பாடல்களைக் காணலாம். எட்டாம் நூற்றுண்டினராகக் கருதப்படும் மாணிக்கவாசகர் அகப் பொருட்சுவை மலியத் தம் திருச்சிற்றம்பலக் கோவையாரை இயற்றியுள்ளார். இவர்கள் சங்ககாலத்து அக இலக்கியங்களில் தோய்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கட்கு முன் னரும் சங்க காலத்துக்குப் பின்னரும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எழுந்தன. அவற்றுள் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார்நாற்பது ஆகியவை அகநூல்களாகும். இவை வெண்பாயாப்பிலமைந்த தொன்றே சங்ககாலஅகப்பாடல்கட்கும் இவற்றுக்கும் உள்ளவேறு பாடு. இவற்றை நுணுகிக் காண்பார் இவ்வாசிரியர்கள் குறுந் தொகை முதலிய நூல்களில் தோய்ந்தவர்களென்பதை நன்குண ரலாம்- இந்த நூல்கள் கி. பி. 4 ஆம் நூற்றுண்டு முதல் 6 ஆம் நூற்றுண்டு வரையுள்ள காலத்தில் தோன்றியவை என்று கோடல் பொருந்தும். பழைய பாடல்கள் தொகுக்கபட்டபின்னர் மீண்டும் தனிப்பாடல்களைப் பாடாது தனித்தனி நூல்களை இயற்றுவாராயினர். இந்நூலாசிரியர்கள் அகநானூற்றிலமைந்த பாடலெண்ணிக்கையை ஓரளவுபின்பற்றினர் என்றுகொள்ளலாம் முல்லை, நெய்தல், மருதம் ஆகியவை ஒவ்வொன்றும் 40 பாடல் களைக் கொண்டவை. இதனைப் பின்பற்றியே கார்நாற்பதும் களவழி நாற்பதும் தோன்றினவெனலாம். இதுபோன்றே 50, 50, 70, 80, 100, 150 என்று பாக்கள் அமையுமாறு நூலியற்றி யுள்ளார். எனவே இவ்வாசிரியர்கள் காலத்துக்கு முன்னர் குறுந்தொகை முதலிய அகப்பாக்களமைந்த தொகைநூல்கள் உருவாகிவிட்டன எனத் தெளியலாம். அக்காலம் மூன்றும் நூற்றுண்டின் இறுதியாகவோ 4 ஆம் நூற்றுண்டின் தொடக்க மாகவோ இருக்கலாம்,

இப்பதினொன் கீழ்க்கணக்கில் களவழிஒன்றுமட்டுமே போர் பற்றிய நூலாகும். குறுந்தொகை முதலியவற்றைப் பின்பற்றிப் பல அக நூல்கள் தோன்றியதுபோலப் புறநானூற்றைத் தழுவி யெழுந்த நூலாக ஒன்றுகூட அமையவில்லை. களவழி கூட வருணனைப் பாடலாகவே அமைகிறது. இது புறநானூற்றைத் தழுவியதாகச் சொல்லமுடியாது. எனவே புறப்பாடல்கள் ஏனைய நூல்கள் உருவானகாலத்தில் உருவாகவில்லை யென்பது தெளிவு. இந்நூல் தொகுக்கப்பட்ட காலத்தில் புறப்பாடல் மரபு முற்றிலும் வீழ்ந்துவிட்டது. நீதி நூல்கள் தோன்றத் தொடங்கி விட்டன. புறநானூற்றைத் தழுவியெழுந்த நூலென்று ஒன்றைக் கூறலாமெனில் அது பெருந்தேவனார் பாரதமே. நச்சினார்க்கினியர் போன்றோர் தொல்காப்பிய புறத்திணையிய லுரையில் இவர் பாடல்களை மேற்கோளாகக் காட்டுவதால் இவ் வுண்மையை நன்குணரலாம். இப்பாடல்கள் புறநானூற்றுப் பாடல்களைப் போலவே உள்ளன, எனவே பெருந் தேவனார் புறநானூற்றை நன்கு பயின்றவராகக் காணப்படுகிறார். எனவே இவர் காலத்திற்கு முன்னே இவர் காலத்திலோ புறநானூற் றின் பாக்கள் நூலாக உருவாகி விட்டனவெனலாம். பெருந் தேவனார் சங்க காலப் புலவரெனக் கருதுவாருமுண்டு. அது பொருந்தாது. இவர் தொடர்நிலைச் செய்யுளாகவும், சிலம் பினைப் போல் உரையிடையிட்ட செய்யுளாகவும், தழுவல் நூலா கவும் தம் நூலை ஆக்கியுள்ளார். வடமொழிக் கல்வி நன்கு பரவி வேரூன்றிய தொரு காலத்தில் இவர் வாழ்ந்தவ ரென்ன லாம். மேலும் சமயச் சார்புடையவராகவும் இவர் காணப்படு கின்றார். எனவே இவர் சம்பந்தர் முதலியோர் காலத்துக்கும் சைவம் முதலிய சமயங்கள் சமண பௌத்தங்களோடு முரணிச் செல்வாக்குப் பெற முயன்ற கி. பி. ஐந்து ஆறும் நூற்றாண்டு கட்கும் இடைப்பட்டவரெனலாம், களப்பிரரை முறியடித்துப் பாண்டியப் பேரரசை மீண்டும் தலை நிமிரச் செய்தவன் கி. பி. 575-ல் ஆண்ட பாண்டியன் கடுங்கோனுவான். இவன் மீண்டும் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றியிருக்க வாய்ப்புண்டு. அவனவை யிலிருந்து இவர் பாரதத்தைப் பாடியவராகலாம். சின்னமனூர்ச் செப்பேடுகள் மதுராபுரிச் சங்கம் வைத்து மாபாரதம் தமிழ்ப் படுத்தியதைப் பாராட்டிச் சொல்லுகின்றது. எனவே இவர் கி, பி. 6-ஆம் நூற்றாண்டினர் என்று கோடல் பொருந்தும்,

பாரதம் பாடிய பெருந்தேவனாரே முதலில் புறநானூற்றுப் பாக்களைத் தொகுத்திருக்கலாமோ வென்ற ஐயம் நிகழ வாய்ப் புண்டு. குறுந்தொகை, நற்றிணை, அகம், ஐங்குறுநூறு, புறம்,

ஆகிய ஐந்துக்கும் இவர் கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடியுள்ளார். சங்க காலத்தில் கடவுள் வாழ்த்துப் பாடி நூலைத் தொடங்கும் மரபு இல்லை. அக்காலம் பாடலாசிரியர் கால மாதவின் என்க. பதினெண் கீழ்க்கணக்குக் காலத்திற் கூட இம்மரபு வலிவு பெறவில்லை. பல நூல்கட்குக் கடவுள் வாழ்த்தில்லாமையை இங்கும் காணலாம். இளங்கோவும் சாத்தனரும் கூட வாழ்த்துப் பாடவில்லை. எனவே கடவுள் வாழ்த்துப் பாடாமல் நூலைப் பாடுவது சரியன்று என்ற கொள்கை வலிவு பெற்றதோர் காலத்தில் வாழ்ந்த பெருந்தேவனர் மேற்சொன்ன நான்கு தொகை நூற்கட்கும் வாழ்த்துப் பாடிச் சேர்த்தார். குறுந்தொகை முதலிய நான்கு நூற்களின் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் நூலின் புறத்தே தனியாக நிற்கவும் புறத்தில் மட்டும் அது நூலின் அகவுறுப்பாகவும் நூலின் முதற்பாட்டாகவும் நிற்பதைச் சிந்திக்கவும் இதைக் கொண்டு நோக்கும் பொழுது இவ்வாசிரியரே முதலில் புறநானூற்றுப் பாக்களில் ஒரு பகுதியைத் திரட்டித் திணைவகுத்துத் தம் வாழ்த்துச் செய்யுளை முதலில் வைத்தமை உய்த்துணரப்படும்.

புறநானூற்றுப் பாடல்கட்குத் திணையும் துறையும் வகுத்துள்ளமையை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். புற நானூற்றுத் திணை துறைகள் தொல்காப்பியத்தைப் பின்பற்றியெழுந்தன வல்ல. நச்சினர்க்கினியரே இதனைக் குறிப்பிட்டுள்ளார். புறநானூற்றுத் திணை துறைகள் 12 ஆம் நூற்றாண்டினதெனக் கருதப்படும் புறப்பொருள் வெண்பா மாலையோடு பொருந்துவனவாகவே யுள்ளன. எனினும் இந்நூற்றொகுப்புக் காலத்தை அவ்வளவு பின்தள்ள முடியாது. ஐயனரிதனர் தாம் பன்னிரு படலத்தைப் பின்பற்றுவதாகக் கூறியுள்ளார். எனவே பன்னிரு படலமே இந்நூலுக்குத் திணை வகுக்கப் பின்பற்றப்பட்டதாக வேண்டும். தொல்காப்பியக் களவியல் கற்பியலை எளிமையாக்கி இறையனர் களவியல் தோன்றியது போலவே அதன் புறத்திணையியலைப் பின்பற்றி எழுந்த நூலே பன்னிருபடலமாதல்வேண்டும். இந் நூலுக்கும் தொல்காப்பியத்துக்கும் பல வேற்றுமைகள் உண்டு. வெட்சியிலேயே கரந்தையையும், உழிஞையிலேயே நொச்சியையும் உள்ளடக்கிக் கூறுகிருர் தொல்காப்பியர். பின் நூல்களோ இவற்றை வேருகக்கொள்ளும். இதுபோல்இன்னும் பல வேற்றுமைகள் உள. எனவே பன்னிரு படல ஆசிரியர்கள் தொல்காப்பியரோடு ஒரு சாலை மாணக்கர் என்பது சற்றும் பொருந்தாது. எனவே கி. பி. ஆரும் நூற்றாண்டளவில் தம் காலத்தில் வழக்கிலிருந்த புறப் பொருள் நூலைப் பின்பற்றி

இவ்வாசிரியர் புறநானூற்றுக்குத் திணையும் துறையும் வகுத்திருத்தல் வேண்டுமென எண்ணத் தோன்றுகிறது.

திணை துறையடிப் படையில் பல பாக்கள் முறைப்படுத்தப் பட்டிருப்பதால் இவ்வேற்பாடு தொகுப்பாசிரியராலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும். உரையாசிரியர் செய்திருக்க முடியாது. பழைய வுரையாசிரியர் புறப்பொருள்வெண்பா மாலைச் சூத்திரங்களை மேற்கோள் காட்டுவதால் அவர் பிற்காலச் சான்றோராவார்.

மேற்கூறிய சான்றுகளால் புறநானூறு இருவேறு காலங்களில் தொகுக்கப் பெற்றது என்பதும், இரு தொகுதிகளாகவே வழங்கியது என்பதும், இதன் முதற் பகுதியைப் பெருந்தேவனாரே தொகுத்திருக்கலாமென்பதும், அவர் காலம் கி. பி. 6 ஆம் நூற்றாண்டாகலாமென்பதும் ஒருவாறு உணரலாம். இக்கருத்துக்களை மேலும் நன்கு ஆராய்வது அறிஞர் கடனாகும்.

(கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 10—10—70 இல் கலைமகள் விழாவின்போது நிகழ்த்திய சொற்பொழிவு)

230-ம் பக்கம் தொடர்ச்சி

வாழ்க்கை வரலாறு எழுதலாம் என்ற எண்ணமே தோன்றியிராத பண்டைக் காலத்தையும், அடியார்களின் அற்புத வரலாறுகளே வாழ்க்கை வரலாறுகள் என்னும் எண்ணம் நிலவி வந்த இடைக்காலத்தையும் நினைத்துப் பார்க்கும் போது, வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய ஒரு தெளிவான எண்ணம் ஏற்பட்டுள்ள அண்மைக் காலம் (சுமார் 1930 — 1968 வரை) பெரிதும் நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது. வாழ்க்கை வரலாறு என்றால் என்ன என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்ததை விட, அதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அத்துறையில் குறையுடைய முயற்சிகளாவது மேற்கொள்ளும் இந்தக் காலம் சிறப்புடையதே அல்லவா? விடுதலை வீரர்கள், அறிஞர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள், மருத்துவர்கள், எழுத்தாளர்கள் முதலான பலதுறையினரையும் பற்றிய வாழ்க்கை வரலாறுகள் வெளிவருகின்றன. அவ்வவர்களோடு தொடர்புடையவர்களே அவற்றை எழுதுகிறார்கள் என்பது இத்துறை நமது மொழியில் நன்கு கால்கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதற்கு அடையாளம் அல்லவா?

(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முதலாவது கருத்தரங்கில் படித்த ஆய்வுரை.)

தமிழில் வாழ்க்கை வரலாறு - ஒரு கண்ணோட்டம்

திருமதி. சாலினி இளந்திரையன்,
எம். ஏ., எம். லிட்., டிப் - யூ. என். அய். யூ.
திருவேங்கடவன் கல்லூரி, புதுதில்லி.

0. மேலைநாட்டு மொழிகளில், குறிப்பாக ஆங்கில மொழியில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் மிகுதியாக வெளிவந்துள்ளன. வாழ்க்கை வரலாறு என்பது படைப் பிலக்கியத்தின் ஒரு துறையாக அங்கே வளர்ந்துள்ளது. எனவே அந்தத் துறை பற்றிய ஆய்வும் அங்கே கணிசமாக நடைபெற்றுள்ளது. [1] தமிழில் வாழ்க்கை வரலாறுகளாகச் சில நூறு புத்தகங்கள் வெளிவந்திருந்தாலும், அவை, இலக்கியத்தின் ஒரு கூறுகச் சிறப்புற வளர்ந்திருப்பதாகச் சொல்ல முடியவில்லை. ஆதலால், தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கிய உணர்ச்சி தோன்றி வளர்ந்துள்ள முறையைப் பற்றிய பொதுவான சில கருத்துக்களை மட்டுமே இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1. 1. தனி மனிதர்களை அவர்களின் அறிவு, வினைத்திட்பம், ஈகைக்குணம் முதலியவற்றுக்காகப் பாராட்டும் போக்கு, எங்கும் போல, நமது தமிழகத்திலும் பல காலத்துக்கு முன்பே தோன்றி விட்டது. அரசர்களையும், வீரர்களையும் வள்ளல்களையும் புறப் பொருட்பாடல்களில் பாராட்டியதோடு மனநிறைவடையாத நமது பழம்புலவர்கள், அகப்பொருள் இலக்கியங்களிலே கூட, சமயம் வாய்க்கும் போதெல்லாம், அவர்களின் சிறப்புக்களையும் சாதனைகளையும் பாடியுள்ளார்கள். [2] சிறப்புக்குரிய ஒருவனே

---

1. (a) John A. Garraty: The nature of Biography; (b) William. R. Thayar: The Art of Biography; (c) Donald A. Stuffer: The Art of Biography in 18th Century England; (d) Harold Nicolson: The Development of English Biography முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

2. அகநானூறு 76 (அஃதை); 125 (கரிகாலன்); 162 (பசும்பூண் பாண்டியன்); 303(பாரி); குறுந்தொகை 91 (அஞ்சி).

(பாராட்டப்பட்டவனே) தவறு செய்தால், அதையும் நம் புலவர்கள் கண்டித்துப் பாடி வைத்திருக்கிறார்கள்.[3] பதிற்றுப்பத்து என்னும் நூலின் ஒவ்வொரு பத்தும் ஒரு சேர அரசனை மட்டும் பாடுகிறது. இவை யாவும் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளே என்றாலும், (வாழ்க்கை வரலாற்றில் இடம் பெறத் தக்க நிகழ்ச்சிகளே என்றாலும்) இவை ஒருவருடைய வாழ்வை முழுமையாகச் சொல்லாததால், இவைகளை வாழ்க்கை வரலாறுகளாகக் கொள்வதற்கில்லை

1. 2. பிற்கால அரசர்களின் மெய்க்கீர்த்திகள் அவர்களின் போர் வெற்றிகளையும் மற்றச் செயல்களையும் கூறுகின்றன. இவைகளில் ஒருவருடைய செயல்கள் அவருடைய வழியினரான பிறர் மீதும் ஏற்றிக் கூறப்படுவதுண்டு. மேலும், இவைகள் எந்த ஓர் அரசனின் வாழ்க்கை வரலாற்றையும் தொடர்ச்சியாகச் சொல்லுவதில்லை உலா, பரணி முதலிய நூல்களில் சொல்லப்படும் "பாரம்பரியமும்" இத்தகையதே. அரசனின் குண ஓவியத்தை முழுமையாகச் சித்தரிப்பது இவைகளை எழுதியவர்களின் நோக்கமாக இருந்ததில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்

1. 3. நமது இலக்கிய வரலாற்றின் இடைக்காலத்தில் (செய்யுளிலும் மணிப்பவள உரை நடையிலுமாக) அடியார்களின் வரலாறுகள் எழுதப்பட்டன. இவை, பெரும்பாலும் வரலாற்று நாயகரின் சிறப்புக்களை மட்டுமே விதந்து சொல்லுவதாலும் குறையும் நிறையும் கண்டு ஒரு முழுமையான மனிதச் சித்திரம் வரைய முயலாததாலும் இவைகளை ஒருதலைச்சார்பான வரலாறுகள் என்றே சொல்லவேண்டும்.[4]

1. 4, "ஒரு தனி மனிதன் வாழ்க்கைக் கதையை இனிமையாக விவரிப்பதே வாழ்க்கை வரலாறு. அந்த விவரணம், வரலாற்று நாயகனை மீண்டும் உயிரோடு உலவவிடுவது போன்ற திறமையோடு செய்யப்படுதல் வேண்டும். வாழ்க்கை வரலாறு உண்மையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம். எனவே, அது. ஒரு வகையில் வரலாறு; மற்றொரு வகையில் கலை. இவை இரண்டில் ஒன்றின் எல்லைக்குள் முழுவதும் சரிந்து

3. கோப்பெருஞ்சோழன் மக்கள் மீதே படை எடுத்தது: புறநானூறு 213; சோழன் கிள்ளிவளவன் உழவர்க்கு மிகுவரி விதித்தது. புறம். 35.

4. The World Book of Encyclopaedia: Biography: One sided Biographies.

விடாமல் நடைபெறுவதே சிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்''.[5] இதுவே, வாழ்க்கை வரலாற்று இலக்கியத்துக்குத் தற்கால அறிஞர்கள் தரும் இலக்கணம். இந்த இலக்கணத் துக்குப் பொருத்தமான வாழ்க்கை வரலாற்று நூல்கள், தமிழில், அண்மைக் காலத்தில் தான் வெளிவரத் தொடங்கி யுள்ளன.

2. 1. 19ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் நம் நாட்டில் புதிய கல்வி முறை ஏற்பட்டது; இதைத் தொடர்ந்து சென்னைக் கல்விச் சங்கம் என்னும் பாடக் குழுவும் (1812ல் தோன்றியது. இத்தோற்றமும், இந்தியர்கள் சொந்தத்தில் அச்சகம் வைத்துக் கொள்ளலாம் என்ற சட்டத்தின் (1835) பிறப்புமாகத் தமிழ்ப் புத்தக வெளியீட்டில் ஒரு சுறுசுறுப்பை ஏற்படுத்தின. இதன் விளைவாகத் தமிழில் உரைநடை நூல்களும் மிகுதியாக வெளி வரத் தொடங்கின. கிளைவ் சரித்திரம் (1871), கொலம்பசு சரித் திரம் (1871). சங்கர விசயம் (1879), கருத்தமுத்துப் பிள்ளை சரித்திரம் (1897) பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம் (1898) முதலிய வாழ்க்கை வரலாறுகளும் வெளிவந்தன கம்பர், காள மேகம், அவ்வையார் முதலிய புலவர்களின் சரித்திரங்களை உள் ளிட்ட விநோதரச மஞ்சரியும் (1877ல்) வெளிவந்தது.[6] இவற் றுட் பலவும் இப்போது கிடைக்காவிட்டாலும். கிடைக்கின்ற சிலவற்றைக் கொண்டே (19ம் நூற்றுண்டின்) மற்ற நூல்கள் எப்படி இருந்திருக்கும் என்று ஒருவாறு ஊகிக்க இடம் உள்ளது: இடைக்காலத்தில், மதத் தலைவர்களின் வரலாறுகளை, ஒருவகை யான சமயத்தை பரப்பும் நோக்கோடு எழுதியது போலவே, பாடப் புத்தக நோக்கில் எழுதப்பட்ட இந்தப் புத்தகங்களை நீதி புகட் டல், உயர்ந்த ஒழுக்கம் கற்பித்தல் என்னும் திட்டவட்டமான கருத்துக்களுடனேயே இவர்கள் எழுதியிருப்பது தெரிகிறது. எனவே, நீதி போதனை முனைப்பே மிகுந்து, இந்த நூல்களின் இலக்கியத் தன்மையை அமுக்கி விடுகிறது.

2. 2. இந்த நூற்றுண்டு பலவகையான எழுச்சிகளைக் கண்டது. அவற்றுள் முக்கியமானவை மூன்று: ஒன்று அரசி யல் எழுச்சி; மற்றது சமுதாயச் சீர்திருத்த எழுச்சி; மூன்றுவது,

---

5 Encyclopaedia Britanniea: Biography

6. மயிலை சீனி வேங்கடசாமி: 19ம் நூற்றுண்டில் தமிழ் இலக்கியம் (1962), பக்கம் 392-402.

இந்த இரண்டு எழுச்சிகளின் விளைவான தமிழ் எழுச்சி. இந்த மூன்றில் ஏதாவது ஒரு துறையில் சீரோங்கியவர்களின் வாழ்க்கை வரலாறுகளே தமிழில் (நேராகவோ மொழிபெயர்ப்பாகவோ) மிகுதியாக எழுதப்பட்டுள்ளன. இந்தியத் தலைவர்களாகிய காந்தி [7], நேரு [8], ஆசாத் [9], காமராசர் [10], சத்தியமூர்த்தி [11] முதலானவர்களின் வாழ்க்கை வரலாறுகள் அவ்வப்போது எழுதப்பட்டதோடு, உலகின் பல நாடுகளிலும் நாட்டு விடுதலைக்கோ சமுதாயச் சீர்திருத்தங்களுக்கோ உழைத்த பலரின் வாழ்க்கை வரலாறும் எழுதப்பட்டுள்ளது. [12] நாட்டு விடுதலைக்குச் சிறிது முன்பும், விடுதலை பெற்றதைத் தொடர்ந்தும் அண்மைக்காலச் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய ஆர்வம் நாட்டிலே மிகுந்துள்ளது. அதன் விளைவாகக் கட்டபொம்மு (வீரபாண்டியக் கட்டபொம்மன்) வீரத்தலைவர் பூலித்தேவர், மருதிருவர், வீரசிதம்பரனார், திருப்பூர்க்குமரன், தென்னாட்டுச் சிங்கம் (ஊமைத்துரை) முதலியோரைப் பற்றி (1940 முதல் 1962 வரை)ப் பலர் எழுதியுள்ளார்கள். இவை, பெரும்பாலும் குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடனேயே எழுதப் படுவதால், அந்த நோக்கைப் பெரிதுபடுத்தும் முகமாகவே வரலாற்று நாயகரின் வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது; அவர் வாழ்வின் மேடுபள்ளங்கள் தெளிவாக விவரிக்கப்படுவதில்லை. வரலாற்று நாயகனின் காலத்திய வெவ்வேறு சூழ்நிலைகளும் விளக்கப்பட வேண்டியது அவசியமே. ஆயினும் வாழ்க்கை வரலாற்று நூல், தனி மனிதன் ஒருவனின் கதையைக் கூறுவது என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

2. 3. தமிழ்த்தேசியம் என்று சொல்லக்கூடிய அளவில் நாடு, மொழி, பண்பாடு ஆகிய துறைகளை அளாவியதாக உண்டான தமிழ் ஆர்வம் அன்று முதல் இன்றுவரை சிறப் போங்கிய தமிழரசர், தமிழ்ப்புலவர் ஆகியோரின் வரலாறுகளை எழுதத் தூண்டியது. [13] சங்க நூல்கள் பலவும் அச்சிடப்பட்டதால், பழந்தமிழ் அரசர், புலவர் முதலியோரைப் பற்றி எல்லாம்

---

(7) மாந்தருக்குள் ஒரு தெய்வம் (8) விந்தை மனிதர் நேரு (9) மௌலானா ஆசாத் (10) காமராசர் வரலாறு (11) சத்தியமூர்த்தி (12) புக்கர்வாசிங்டன் (வ. வே. சு.); கமால் பாட்சா (நாகராசன்); ரூசோ (சாமிநாத சர்மா); சன்யாட்சென் (சாமிநாதசர்மா)

13. தமிழ்ப் புலவர் வரிசை; சங்ககால அரசர் வரிசை: சென்னைத் தமிழ்ப் புலவர்கள்; நெல்லைத் தமிழ்ப் புலவர்கள்; தமிழக வீரர்கள்; திருமாவளவன்; வள்ளல்பாரி; சேரன் செங்குட்டுவன்;

விரிவாக எழுத வாய்ப்பு ஏற்பட்டது. சங்ககாலத்து அரசர், புலவர்களின்மீது ஏற்பட்ட பற்று வளர்ந்து விரிந்து இக்காலத் தமிழ்த் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள்மீதும் பெரும் ஈடுபாடாக மலர்ந்தது, எனவே அவர்களில் பலரைப் பற்றியும் பலர் எழுதினார்கள். [14]

2. 4. அறிஞர் வரலாறு, [15] கலைஞர் வரலாறு, [16] வரலாற்றுத் தொகுப்புக்கள், [17] எழுத்தாளர் வரலாறு, [18] சுவைஞர் வரலாறு [19] முதலான பலவும் தமிழில் வெளிவந்துள்ளன. இசுலாமியர், கிறித்தவர் முதலியோரும் தத்தம் சமயத் தொண்டர்களையும் அறிஞர்களையும் பற்றிய நூல்களை வெளியிட்டுள்ளார்கள். [20]

2. 5. அறிவியல் மேதைகளைப் பற்றியும் விவசாயப் புரட்சியாளர்களைப் பற்றியும் [21] எழுதப்பட்டுள்ள சுருங்கிய வரலாறுகள், "பெருமை என்பது பல இன்னல்களுக்கும் அயங்காத முயற்சியின் விளைவே" என்பதை நயம்படத் தெரிவிக்கின்றன.

---

14. திரு. வி. கலியாணசுந்தரனார்; மறைமலையடிகள்; விபுலானந்த அடிகள்; எல் டி. சாமிக்கண்ணுப்பிள்ளை: அரசஞ் சண்முகனார்; கவிமணி; சித்திரபாரதி முதலியன.

15. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், பண்டிதமணி முதலியன

16. மைசூர் சௌடய்யா, கலைவாணர் என். எசு. கே; கோபாலகிருட்டிண பாரதியார், சங்கீதகவமணிகள், கலைமணிகள்

17 வரலாற்று மேதைகள்; யான் கண்ட புலவர்கள், தமிழ்ச் சுடர்மணிகள்; தற்காலத் தமிழ்நாட்டு மேதைகள். தமிழ்நாட்டு வள்ளல்கள்,

18, வ. வே. சு. அய்யர்: புதுமைப்பித்தன் வரலாறு; நான் கண்ட நால்வர், அறிஞர் பெர்னார்டுசா. தாகூர், சரத்சந்திரர் வரலாறு

19. டி, கே, சி. வரலாறு

20, இமாம்கள் சரிதை; மகான் ஷைகு சாஅதி; பர்த்தலமேயோ சீகன்பால்கு; வீரமாமுனிவர்; சா வே. அசரியா

21. அறிவியல் முனைவர் அய்ன்சுடீன், இந்திய விஞ்ஞானிகள், தானியக் கலைஞர்கள், சர். சி. வி. இராமன் முதலியன.

2. 6. அண்மையில் (1954—1966)) சிந்தனையாளர் வரிசை என்னும் தொடரில் வெளிவந்துள்ள சிறு சிறு நூல்கள் [22] சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. ஒரு வகையில் இவை அறிஞர் வரலாறு என்னும் பகுதியில் அடங்குமாயினும், அதைப் போல் விரிந்து செல்லாமல் இவை மிகச் சுருங்கிய அளவினவாக உள்ளன. வரலாற்று நாயகரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விரித்துச் செல்லாமல், அவர்களின் எழுத்து / பேச்சுக்களைக் கொண்டு அவர்களின் சிந்தனைகளை விரிவாக விளக்குகின்றன.

3. சுயசரிதை என்று சொல்லப்படும் தன் வரலாறு பற்றி இங்கே பேசவில்லை. காரணம், வைன் சுமேகர் என்பார் கூறுவது போல "வாழ்க்கை வரலாறும் தன் வரலாறும் ஒரு தனிப்பட்ட மனிதனின் கதை என்ற அளவில் ஒற்றுமையுடையனவாகத் தோன்றினும் அவை வெவ்வேறு வகையினவே. தன் வரலாறு என்பது வரலாற்று நாயகனுடைய நினைவுகளின் மறுபதிப்பு; வாழ்க்கை வரலாறோ, நாயகனின் நடவடிக்கைகள் அவரைப் பற்றிய புள்ளி விவரங்கள் பிறருடைய கருத்துக்கள். அவருடைய எழுத்துக்கள், பேச்சுக்கள் முதலிய பலவற்றைக் கொண்டு நிருமாணிக்கப்படும் சொல் மாளிகை." [23] எனவே தன் வரலாறு என்பது (வாழ்க்கை வரலாற்றினின்று வேறுபட்ட) தனி ஆய்வுக்கு உரியது.

4. 1. தமிழில் வாழ்க்கை வரலாறு என்னும் துறை தொடங்கியுள்ளது. ஆயினும், ஓர் இலக்கிய வகை என்ற அளவில், தமிழில், மிகுதியான வாழ்க்கை வரலாறுகள் இன்னும் வெளிவரவில்லை என்றே சொல்ல வேண்டும்.

4. 2. இத்துறையின் மெதுவான வளர்ச்சிக்குக் காரணம் காண்பது எளிதன்று. ஆயினும், அண்மைக் காலமாக இத்துறை நூல்கள் வெளிவரும் முறையைக் கவனித்தால் சில உண்மைகள் வெளிப்படுகின்றன: அரசியல் தலைவர்களின் வரலாறுகள் அவ்வவர் தலைமைப் பதவி பெறும்போதே அவசரம் அவசரமாக வெளியிடப்படுகின்றன. [24] இவர்களைப் பற்றிய

---

22. டார்வின், இங்கர்சால். அரிசுடாட்டில், பிளேட்டோ, பிராய்டு, வால்டேர், காரல்மார்க்சு, மாக்கியவெல்லி, எமர்சன், தொல்காப்பியர், மாண்டெய்ன், நியட்சே, கன்பூசியசு முதலியன.

23. John A. Garraty: The nature of Biography (1957), P. 26

24. காமராசு வாலாறு (1963); தியாக வீரர் காமராசு (1964); பிரதமர் சாசுதிரி (1965): இந்திரா காந்தி (1966) பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு (1968)

நூல்கள் வெளி வருவதற்கும் இவர்கள் (கட்சித் தலைவர், முதலமைச்சர், பிரதமர் முதலிய) பதவிகள் பெறும் காலத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

4. 3. சமயத் தலைவர்களின் வரலாறு அந்தந்தச் சமயத்தவர்களே (பெரிதும் தங்கள் சமயம் உயர்ந்தது என்ற கருத்துத் தொனிக்குமாறே) வெளியிடுகிறார்கள். முன்பே குறிப்பிட்டுள்ளது போல், அவர்களைத் தனி முழு மனிதர்களாகச் சித்தரிக்கும் வாய்ப்பு இத்தகைய நூல்களில் இல்லாமல் போகிறது

4. 4. "தலைவர் வழிபாடு" என்னும் குறைபாடு சமுதாயத்தை இறுகலாகப் பற்றியிருப்பதால், நூல் எழுதப் புகுவோரும் (பெரும்பாலும்) வரலாற்று நாயகரைக் குற்றங் குறை இல்லாதவர்களாகக் காட்டவே விரும்புகின்றார்கள். "காலஞ்சென்ற தம் கணவரைப் பற்றி அவர்களின் மனைவியர் எழுதும் நூல்களே இத்துறையில் கடைசித் தரத்தவை" என்கிறார் கிரோஸ் என்னும் அறிஞர்[25] தலைவர் வழிபாட்டுப் போக்குடையவர்கள் எழுதும் நூல்களும் இத்தகையவைகளே. இவர்களின் கண்ணில் குறையே படுவதில்லை. எனவே, குறையும் நிறையும் கலந்த இயல்பினரான மனிதர்களைப் பற்றிய வரலாற்றில் அதுவே பெருங்குறையாகி விடுகிறது.

4. 5. தமிழ் எழுச்சியின் விளைவாக வெளிவந்த பண்டைக் கால அரசர்/புலவர் வரலாறுகள் மக்களிடையே பெரும் அளவில் தமிழ் உணர்ச்சியை ஊட்டியுள்ளன என்பது உண்மையே. ஆயினும், இவ்வரலாறுகள், இலக்கியத்திற் காணப்படும் சில செய்திகளை மட்டுமே துணையாகக் கொண்டு எழுதப்படுவதால், இவைகளிலும் ஒரு முழுமை இருப்பதில்லை; பழைய நூல்களில் செய்யுளில் படித்த செய்திகளை இவைகளில் உரைநடையில் படிக்கிறோம் என்னும் எண்ணமே உண்டாகிறது. பழங்காலத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் போதிய அளவு கிடைக்காததால், இந்த நூல்களின் நாயகர்கள் உரிய வரலாற்றுப் பின்னணியில் சித்தரிக்கப்படுவதும் இல்லை.

5. தமிழ் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இத்தனை குறைகள் தென்பட்டாலும், மெது மெதுவாகவாயினும் இத்துறை வளர்ந்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

---

25. Quoted in "The nature of Biography". P. 156.

[223ம் பக்கம் பார்க்க]